இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 387
சனி, 18 ஏப்ரல், 2026 |
பக்கங்கள் 15
www.ilakku.org




அன்னை பூபதி
அவர்களின் 38ஆவது நிறைவாண்டின்
நினைவுகளுடன் …




# நிலக்கரி கொள்வனவில் ஊழல்

## அமைச்சரின் பதவி விலகலால் அபிமானம் இழந்த அநுர அரசு

விதுரன்

# அன்னை பூபதி; ஈழத்திற்காய் களமாடிய அன்னையர்களின் குறியீடு

தீபச்செல்வன்



# ஹங்கேரி ஆட்சிமாற்றம் ஒரு தொடர் நிகழ்வின் பகுதி

தமிழில்: ஆர்த்திகன்

# நிலக்கரி இறக்குமதியில் ஊழல் நடைபெறவில்லை - அமைச்சர் விஜித



நிலக்கரி இறக்குமதியின் போது எவ்வித ஊழலும் நடைபெறவில்லை என்றும், எனினும் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தரம் குறைந்த மட்டத்தில் இருந்ததை ஏற்றுக்கொள்வதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தனது பதவியை இராஜினாமா செய்தமை தொடர்பில், அமைச்சர்கள் பலரின் பங்கேற்புடன் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இன்று (17) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நிலக்கரி கொள்வனவு குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவிடம், நிலக்கரி தொடர்பான ஊழல்கள் குறித்து எவரேனும் தகவல் அறிந்திருந்தால் அதனை வழங்க முடியும் என்றும் அவர் இதன்போது மேலும் குறிப்பிட்டார். நிலக்கரி இறக்குமதியின் போது எவ்வித ஊழலும் நடைபெறவில்லை என்றும், எனினும் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தரம் குறைந்த மட்டத்தில் இருந்ததை ஏற்றுக்கொள்வதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

## மாகாணசபைத் தேர்தலை: தேர்தல் ஆணைக்குழு விளக்கம்




இந்த ஆண்டு இறுதிக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க விரிவான விளக்கமளித்துள்ளார்.

2017ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் மூலம், பழைய விகிதாசார முறைக்குப் பதிலாக 'கலப்பு விகிதாசார பிரதிநிதித்துவ முறை' அறிமுகப்படுத்தப்பட்டது.

இருப்பினும், இந்த முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு அவசியமான தொகுதி எல்லை நிர்ணயப் பணிகள் முறையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை.

முன்னதாக சமர்ப்பிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படாத நிலையில், அதனை மீளாய்வு செய்வதற்காக பிரதமரின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழுவும் தனது அறிக்கையை குறித்த காலத்திற்குள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கத் தவறியதே இந்தத் தேர்தல் முடக்கத்திற்கு பிரதான காரணமாகும்.

தற்போது நிலவும் இந்த முட்டுக்கட்டையை உடைப்பதற்காக பாராளுமன்ற விசேட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் மூலம் பல்வேறு தரப்பினரிடமும் கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன. இந்த குழுவில் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்

தொடர்ச்சி: பக்கம் 14

## நெடுந்தீவு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி போராட்டத்துக்கு அழைப்பு



நெடுந்தீவு மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி, எதிர்வரும் 24ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்த விபரங்களை யாழ், ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது போராட்ட ஏற்பாட்டுக் குழுவினர் விரிவாக வெளியிட்டனர்.

இந்தத் தீவின் பிரதான பிரச்சினையாகக் குடிநீர் நெருக்கடி உருவெடுத்துள்ளது. சுமார் 1418 குடும்பங்கள் வாழும் நெடுந்தீவில், கடல்நீர் சுத்திகரிப்புத் திட்டம் ஒரு பகுதி மக்களுக்கே சென்றடைகின்றது.

எஞ்சிய மக்கள் சாராப்பிட்டி பகுதியில் இருந்து பெறப்படும் நிலத்தடி நீரையே நம்பியுள்ளனர். இருப்பினும், அளவுக்கு அதிகமான நீர் நுகர்வு காரணமாக நிலத்தடி நீர் உவர் நீராக மாறி வருவதோடு, கடல் நீர் நிலத்தடி நீருடன் கலக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இது தீவின் எதிர்கால வாழ்வாதாரத்தைப் பாதிக் கும் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். கடல் போக்குவரத்தைப் பொறுத்தவரை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பற்ற செயற்பாடு களை மக்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

50 ஆண்டுகளுக்கும் மேலாகச் சேவையில் உள்ள குமுதினி படகு அடிக்கடி

தொடர்ச்சி: பக்கம் 13

# அமெரிக்காவின் நடவடிக்கையால் முடங்கும் ஐரோப்பாவின் வான் போக்குவரத்து




ஈரானுக்கு எதிரான அமெரிக்க-இஸ்ரேல் போரினால் எண்ணெய் விநியோகம் தடைப்பட்டால், "விரைவில்" விமானங்கள் இரத்து செய்யப்படக்கூடும் என எச்சரித்த சர்வதேச எரிசக்தி முகாமையின் (IEA) தலைவர் ஃபாத்திஹ் பிரோல், அசோசியேட்டட் பிரஸ்ஸிற்கு அளித்த பேட்டியில், "ஐரோப்பாவிடம் சுமார் ஆறு வாரங்களுக்கு மட்டுமே ஜெட் எரிபொருள் எஞ்சியிருக்கலாம்" என்று கூறியுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணை கிட்டத்தட்ட மூடப்பட்டதால் "நாம் இதுவரை சந்தித்ததிலேயே மிகப்பெரிய எரிசக்தி நெருக்கடி" உலகளாவிய விளைவுகளை ஏற்படுத்தும் என்று பிரோல் கூறினார். "கடந்த காலத்தில், 'டைர் ஸ்ட்ரெய்ட்ஸ்' (Dire Straits) என்ற ஒரு குழு இருந்தது. அது இப்போதும் ஒரு 'டைர் ஸ்ட்ரெய்ட்' ஆக உள்ளது, மேலும் இது உலகப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தப் போகிறது. இது எவ்வளவு காலம் நீடிக்கிறதோ, அவ்வளவு மோசமாக உலகெங்கிலும் உள்ள பொருளாதார வளர்ச்சிக்கு தடையாகவும் , பணவீக்கத்திற்கு காரணமாகவும் அமையும்"

"இதன் தாக்கம் பெட்ரோல் விலை உயர்வு, எரிவாயு விலை உயர்வு, மின்சார விலை உயர்வு" என்பதாக இருக்கும். இதனிடையே, அமெரிக்க கருவூலம், இருபதுக்கும் மேற்பட்ட தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் கப்பல்களைக் குறிவைத்து, ஈரானின் எண்ணெய் தொழில் மீது ஒரு புதிய

தொடர்ச்சி: பக்கம் 14

## சூடானில் "இணை அரசாங்கத்தை" உருவாக்க சர்வதேச அமைப்புகள் தடை

சூடானில் ஒரு "இணை அரசாங்கத்தை" உருவாக்குவதை சர்வதேச அமைப்புகள் நிராகரித்துள்ளன.மோதல் நிறைந்த அந்த நாட்டில் பிளவுகளை ஆழப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளுக்கு எதிராக அவை எச்சரித்துள்ளன.




பெர்லினில் நடைபெற்ற மூன்றாவது சர்வதேச சூடான் மாநாட்டில் புதன்கிழமை வெளியிடப்பட்ட ஒரு கூட்டறிக்கையில், ஆப்பிரிக்க ஒன்றியம், அரசுகளுக்கிடையேயான வளர்ச்சி ஆணையம், அரபு நாடுகளின் கூட்டமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. ஆகியவை, இத்தகைய முயற்சிகள் நாட்டின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையைக் குலைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளன என்று சுட்டிக்காட்டியதோடு, அனைத்துத் தரப்பினரும் பதற்றத்தைத் தணிக்கும் திசையில் செல்லுமாறு வலியுறுத்தியுள்ளன..

இராணுவத்திற்கும் துணை இராணுவப் படையான விரைவு ஆதரவுப் படைகளுக்கும் (RSF) இடையே ஏப்ரல் 2023 முதல் சூடானில் தொடரும் உள்நாட்டுப் போர், தொடர்ந்து ஸ்திரத்தன்மை இன்மையை அதிகரித்து வரும் நிலையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

"பேச்சுவார்த்தை மூலம் நீடித்த அமைதி" ஏற்பட வழிவகுக்கும் சூழல்களுக்கு செல்வாக்குள்ள தரப்பினர் பங்களிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

கடந்த ஜூலை மாதம், சூடான் ஸ்தாபகக் கூட்டணியின் தலைமை மன்றம் (TA-SIS), ஒரு போட்டி அரசாங்கத்தை உருவாக்குவதாக அறிவித்தது. பிராந்திய ஆளுநர்களை

தொடர்ச்சி: பக்கம் 14

## ஈரான் போர், அமெரிக்காவின் கடன் வாங்கும் ஒப்பந்தத்தை முறித்துள்ளது



1974 முதல், அமெரிக்காவும் சவூதி அரேபியாவும் ஒரு இரகசிய ஒப்பந்தத்தைக் கொண்டிருந்தன. வளைகுடா நாடுகள் எண்ணெயை டொலர்களில் விற்று, அதன் இலாபத்தை அமெரிக்க சொத்துக்களில் முதலீடு செய்கின்றன. அதற்குப் பதிலாக, வொஷிங்டன் இராணுவப் பாதுகாப்பை வழங்குகிறது.

அந்த ஏற்பாடு, கடந்த 50 ஆண்டுகளாக அமெரிக்காவின் கடன் வாங்கும் செலவு களை செயற்கையாகக் குறைவாக வைத்திருந்தது. ஆனால் ஈரான் போர் அதை முறித்துள் ளது.

அமெரிக்கா தனது வளைகுடா நட்பு நாடுகளை முன்னறிவிப்பின்றித் தாக்கியது,

தொடர்ச்சி: பக்கம் 15

## பெரிய ஈரானுக்கு சின்ன ஈரான் நன்கொடையாக வழங்கும் தங்க நகைகள்



இந்திய நிர்வாக காஷ்மீரைச் சேர்ந்த பலர் ஈரானில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்கள் தங்க நகைகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் ஈத்-உல்-பித்ர் பண்டிகை கொண்டாட்டத்தின் போது இடம்பெற்றுள்ளது.

மார்ச் 21 அன்று தெற்காசியா ஈத்-உல்-பித்ர் பண்டிகையைக் கொண்டாடியபோது, ஈரான் மீது அமெரிக்கா-இஸ்ரேல் நடத்தும் போரில் தப்பிப் பிழைக்கப் போராடும் பொது மக்களுக்கு உதவும் ஒரு நிவாரண நிதி சேகரிப்பு முயற்சிக்கு மஸ்ரத் முக்தார் தனது தங்கக் காதணிகளை வழங்கினார்.

தொடர்ச்சி: பக்கம் 14

# இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள கேப்பாப்புலவு மக்களின் பூர்வீகக் காணிகள்!

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள கேப்பாப்புலவு மக்களின் பூர்விகக் காணிகளை விடுவிக்க இராணுவத்துடன் பேச்சு நடாத்தி விரைவில் முடிவைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு - கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் கேப்பாப்புலவு காணி விடுவிப்புத்தொடர்பில், கூடியவிரைவில் இராணுவத்துடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, குறித்த கலந்துரையாடலின் பின்னர் கேப்பாப்புலவு காணி விடுவிப்புத் தொடர்பான முடிவு தம்மால் அறிவிக்கப்படுமெனவும் பதிலளித்துள்ளார்.

பாராளுமன்ற குழு அறையில் 07.04.2026 அன்று இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கேப்பாப்புலவு காணிவிடுவிப்பு விடயம் தொடர்பில் குறித்த பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலேசனைக்குழுக்கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், முப்படை அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் கடந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முன்னேற்ற நிலைமைகள் குறித்து ஆராயும்போது கேப்பாப்புலவு மக்களின் காணி விடுவிப்பு விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கேப்பாபுலவு காணி விடுவிப்பு விடயத்தில், கடந்த கூட்டத்தில் இராணுவத்தினரிடமிருந்து ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான அனுரகுமார திசாநாயக்க அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது. எனினும் இராணுவத்தினரிடமிருந்து முழுமையான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லையென இதன்போது சுட்டிக்காட்டப் பட்டிருந்தது.

இந்நிலையில் இராணுவத்திற்கு அந்தக் காணிகள் தேவையென காணி உரிமையார்களிடம் இராணுவத்தால் ஏற்கனவே கோரப்பட்டதா எனவும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

குறித்த காணிவிடயத்தில், காணி உரிமையாளர்கள் தமக்கு சீரான அறிவித்தல்கள் எதனையும் தமக்குத் தரவில்லை எனவும், அது தொடர்பாக தாம் விரிவான அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பதாக இராணுவத்தினரால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை இவ் விடயத்தில் இராணுவத்தால் கையகப் படுத்தப்பட்டுள்ள காணிகளுக்கு மாற்றீடாக 44காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டிருந்தாலும், 11பேருக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்படவில்லை என ஜனாதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே இந்தவிடயத்தில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் 11பேருக்கான மாற்றுக்காணி வழங்கும் விடயத்தில் கவனஞ்செலுத்தியிருக்கலாம் எனவும் ஜனதிபதியால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இதன்போது கேப்பாப்புலவு மக்களின் பூர்வீகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி நான் எனது கருத்துக்களை முன்வைத்திருந்தேன்.

குறிப்பாக 1818ஆம் ஆண்டளவிலிருந்து கேப்பாப்புலவில் மக்கள் குடியிருப்பதாக வரலாறுகள் இருக்கின்றது என்ற விடயத்தினை இதன்போது சுட்டிக்காட்டினேன்.

அந்தவகையில் மக்களின் வாழ்வாதார மூலங்களுடன் கூடிய பூர்வீக குடியிருப்புக் காணிகளே இவ்வாறு இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தெளிவுபடுத்தினேன்.

அத்தோடு முன்னைய காலங்களில் கேப்பாப்புலவுப் பகுதியில் இராணுவமுகாம்கள் எவையும் இருந்திருக்கவில்லை என்பதையும் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தேன்.

இந்த நிலையில் கடந்த 2009ஆம் ஆண்டு மக்கள் தமது பூர்வீக வாழ்விடத்திலிருந்து இடம்பெயர்ந்திருந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்வதற்கு வந்தபோது அவர்களின் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதை அந்த காணிகளுக்குரிய மக்களால் அவதானிக்க முடிந்துள்ளது.

இத்தகையசூழலில் அயற் கிராமமான சீனியாமோட்டை என்னும் கிராமத்தில் இந்த மக்கள் குடியேற்றப்பட்டனர். குறிப்பாக ஒரு குடும்பத்திற்கு 0.25ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டு அந்த மக்கள் குடியேற்றஞ் செய்யப்பட்டனர். இவ்வாறு மக்கள் தமது

தொடர்ச்சி: பக்கம் 14

**ஆசிரியர் தலையங்கம்** | 18 ஏப்ரல், 2026

# இன்றைய காலத்தில் மக்களிடையான புரிந்துணர்வே இறைமைகளுக்கான பாதுகாப்பு

2026ம் ஆண்டு கோடைகாலத்தில் பிரித்தானியாவில் சில உணவுப்பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்படுவதால் பட்டினி தலை தூக்கலாம் என்ற எச்சரிப்பு வந்து சில நிமிடங்களுள் உலகின் மத்திய சமையல் எனப்பொருள்படும் வேல்ட் சென்றல் கிச்சின் அமைப்பின் தலைவர் யோஸ் அன்ரேஸ் " உலகில் ஈரான் போரால் உரவளங்கள் இல்லாது போகும் நிலையில் 2026 கோடைக்குப் பின்னரும் 2027 இலும் பரந்த அளவில் பட்டினி நிலை தலைதூக்கும் என எச்சரித்துள்ளமையை பிரிதர்தானியாவின் ஆங்கில நாளிதழ் த கார்டியன் கடந்த வியாழக்கிழமை கட்டுரையாகவே வெளியிட்டது.

அதே வேளை ஐரோப்பாவில் ஒரு சில கிழமைகளுக்குத் தான் விமான எரிபொருட்கள் உள்ளதால் விமானப்பயணங்கள் இப்பொழுதே குறைக்கப்படுகின்றன என்ற செய்தி ஆட்களினதும் பொருட்களினதும் உலகளாவிய போக்குவரவுச் சுதந்திரமும் இக்கட்டான நிலைக்கு விரைந்து கொண்டிருப்பதை தெளிவாக்கியுள்ளன. அதே நேரத்தில் ஈரான் இப்பொழுதே இதுவரை தனது உட்கட்டுமான இழப்புக்காக அமெரிக்க 200 பில்லியனுக்கு மேல் நட்ட ஈடுகொடுக்க வேண்டுமென மதிப்பிட்டுள்ளமை எந்த அளவுக்கு இந்த யுத்தம் ஈரானைப் பாதித்துள்ளது என்பதை எடுத்துரைக்கும் நேரத்தில் அமெரிக்காவும் இந்த யுத்தத்தினை நடாத்த இதுவரை 200 பில்லியனுக்கு மேலாகச் செலவிட்டுள்ளது என்ற மதிப்பீடுகளும் வெளியாகி வருகின்றன.

இவற்றால் விலைவாசி உயர்வு ஏற்படுவதை இன்பிளமேசன் என பொருளாதாரத்தில் கூறும் பாணியில் ட்ரம்பிளமேசன் எனக் கேலி சித்திரத்தையே பிரித்தானியாவின் த கார்டியன் ஆங்கில நாளிதழ் வெளியிட்டிருந்தது. இவ்வாறான ஒரு காலகட்டத்தைப் புலம்பதிந்து வாழும் நாடுகளிலும் தாயகத்திலும் எதிர்கொள்ள ஈழத்தமிழ் மக்களிடையான புரிந்துணர்வை வளர்த்தல் மூலம் ஈழத்தமிழர்களுக்கான இடர் முகாமைத்துவ திட்டமிடல் ஒன்றுக்கான பலமான கட்டமைப்பை உருவாக்க உடனேயே முயற்சிகளைத் தொடங்க வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார முதன்மை எண்ணமாகவுள்ளது.

மேலும் இந்நிலையில்தான் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருத்தந்தை 14வது லியோ அவர்கள் இன்றைய உலகின் அவலநிலை குறித்து " சில கொடுங்கோன்மையாளர்கள் மிக அதிக பில்லியன்களை கொல்வதற்கும் அழிப்பதற்கும் செலவிடுகின்றார்கள். இவர்கள் தங்களுடைய தன்னலத்திற்கு கடவுளையும் சமயத்தையும் கூட நியாயப்படுத்தலுக்குப் பயன்படுத்துகிறார்கள்" என வெளிப்படையாகவே 288 மில்லியன் கத்தோலிக்க மக்களைக் கொண்ட ஆபிரிக்கக் கண்டத்துக்கான விஜயத்தின் பொழுது கமரூன் நாட்டில் ஆலயத்தில் திருப்பலி நிகழ்த்தும் பொழுது மறையுரையிலேயே கூறியுள்ளார்.

இது உலகில் அமைதிக்கான குரல் எந்தச் சூழலிலும் எதற்கும் அஞ்சாது மனிதநேயம் உள்ளவர்களால் எழுப்பப்பட்டுக்கொண்டே இருக்கும் என்பதை மீளவும் உறுதி செய்கிறது. இந்த முன்மாதிரிகையை இலங்கையில் உள்ள மதத்தலைவர்களும் பின்பற்றினாலே இலங்கையில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் நடைமுறைச் சாத்திமாகும் என்பது இலக்கின் அடுத்த எண்ணமாகவுள்ளது. கூடவே வெளிப்படையாகவே அமைதிக்காகச் செயற்படும் ஸ்பெய்ன் பிரதமருடன் ஈழத்தமிழர்கள் இதுவரை எங்கள் பிரச்சினைகளை எந்த அளவுக்கு உரையாடியுள்ளனரென்ற கேள்வியையும் இலக்கு எழுப்ப விரும்புகிறது. உலக அரசியல் ஒழுங்குமுறையும் அனைத்துலக சட்டங்களும் ட்ரம்பாலும் நெத்தன்யாகுவாலும் செயலிழந்துள்ள இன்றைய காலகட்டத்தில் மக்களிடையான புரிந்துணர்வே இறைமைகளுக்கான பாதுகாப்பு என்பதை இலக்கு மிகவும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றது.

மேலும் ஈரானை உட்கட்டுமான நாசம் செய்து 200 பில்லியனுக்கு மேல் ஈரான் நட்டஈடாகக் கோர வைத்துவிட்டு 14 நாள் தற்காலிக அமைதி எனவும் லெபனானை கடந்த வியாழக்கிழமை பத்துநாள் தற்காலிகப் போர்நிறுத்தத்தை அறிவிப்பதற்கு ஒரு மணி நேரத்துக்கு முதலும் லெபனானின் தெற்குப்பகுதியை மற்றைய பகுதிகளில் இருந்து பிர்க்கப் பாலங்கள் மேல் குண்டு வீசி விட்டு இஸ்ரேல் நிற்கும் நிலையில் ட்ரம்ப் இஸ்ரேல் லெபனான் பிரதமர்களை வெள்ளைமாளிகைக்கு அழைத்து பேசப் போகிறார். இப்படியான நடைமுறை நிலையில் அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் ஈரானுக்கான செயற்பாட்டுத் தளபதியும் அமெரிக்க படைத்தளபதியும் அருகிருக்க "நாங்கள் விரும்புகின்ற காலம் வரை ஹேர்மூஸ் நீரிணை மேலானதும் ஈரான் கடல் துறைமுகங்கள் மேலானதுமான முற்றுகையைத் தொடர்வோம். வேண்டுமானால் போர்தாக்குதல்களையும் மீண்டும் தொடங்குவோம். உங்களை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்" என ஈரானை எச்சரித்துள்ளார். ஈரானின் இராணுவத் தலைமை ஆலோசகரும் தாங்கள் அமெரிக்க கப்பல்கள் அனைத்தையும் அளிப்போம் எனப்பதில் சூளுரைத்துள்ளார்

இவ்வாறு உலகம் பதற்ற வாழ்வில் இருக்கும் சூழலில் வுவனியாவில் உள்ள வெடுக்குநாறி மலை பௌத்தர்களுக்கு உரியது என சிறிலங்காவின் புத்தசாசன அமைச்சரே வரலாற்றுத் திரிபுவாதம் செய்தமை கடந்தவாரத்து தாயகச் செய்தியாகவுள்ளது. அவ்வாறே முன்னாள் யாழ்ப்பாண சிறிலங்காப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தையிட்டியில் பௌத்த விகாரைக்காக சிறிலங்கா இராணுவத்தினரின் அனுசரணையுடன் உள்வாங்கப்பட்ட தனியார் காணிகளை அளந்து உறுதிக்காரிடம் மீளக்கையளிக்குமாறு சிறிலங்கா அரச தலைவர் பணிப்பு என்று செய்தி வந்தாலும் தையிட்டி விகாரையே சிறிலங்கா இராணுவத்தினது என்று அதன் பெயர்ப்பலகையிலேயே உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி அப்பகுதியில் மீளவும் அபகரிக்கப்பட்ட காணிகளை மீளக் கையளிப்பதற்கான நடைமுறைச் செயற்பாடுகள் எதுவும் இதுவரை தொடங்கப்படாத படியால் அடுத்த வாரங்களில் சிறிலங்காவின் அமைச்சர்கள் செய்ய விருக்கும் வெளிநாட்டு வருகைகளின் பொழுது அனைத்துலகத்திற்குத் தாங்கள் தையிட்டிப் பிரச்சினைத் தீர்வுக்கு உரியன செய்வது போன்ற அரசியல் நடிப்பே அரச தலைவரின் அறிவிப்பு என எடுத்து விளக்கியுள்ளார்.

கூடவே குருந்தூர்மலையில் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக நடப்பதாகக் கூறிக் கொண்டே அங்கு முழுஅளவிலான விகாரை அமைக்கப்பட்டுள்ளமையையும் செல்வராசா கஜேந்திரன் தனது சந்தேகத்துக்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டியுள்ளார். அவரது கூற்றுப்படியே அனைத்துலகத் தலைமைகளும் ஏமாறுகின்றன என்பதற்கு உதாரணமாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் சிறிலங்காவின் தூதுவரும் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான சுமித் தஸநாயக்காவிடம் சிறிலங்காவின் மனித உரிமைகள் ஆணையகத்துடனான ஒத்துழைப்புக்குப் பாராட்டுத் தெரிவித்துச் சிறிலங்காவுக்குத் தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாக உறுதியும் அளித்துள்ளார்.

இந்நிலையில் ஈழத்தமிழர்களின் வாழ்வில் அன்றாடம் நடைபெறுவனவற்றை உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் ஆற்றல்கள் வேகமாக வளர்க்கப்பட வேண்டிய காலமாக இக்காலம் அமைகிறது. உண்மையில் ஏற்கனவே கூறியது போல இன்றைய காலகட்டத்தில் மக்களிடையான புரிந்துணர்வே இறைமைகளுக்கான பாதுகாப்பாக உணரப்படுகிறது. ஆகவே ஈழத்தமிழர்களும் இதனை கவனத்தில் எடுத்து தங்களிடை பலம்பொருந்திய ஊடக மையம் ஒன்றைக் கட்டியெழுப்புவது காலத்தின் தேவையாக உள்ளதென்பதை இலக்கு மீளவும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றது. இதனை யார் செய்வது என்ற கேள்விக்கு ஈழத்தமிழ் மக்களாகிய ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும் செயற்பட வேண்டும் என்பதே பதில். இலக்கும் உயிரோடைத் தமிழும் தங்களின் ஊடகத்துறை அனுபவங்களை இவ்வாறு ஊடக மையத்துக்கு உழைக்க முன்வரும் மக்களுடன் பகிர்ந்து கொள்ள ஆயத்தமாகவுள்ளனர். "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்" என்கின்ற வள்ளுவர் வாக்கு ஒவ்வொரு தமிழருக்குமான உற்சாக மருந்தாக அமையட்டும்.

**ஆசிரியர்**




# நிலக்கரி கொள்வனவில் ஊழல்
## அமைச்சரின் பதவி விலகலால்
# அபிமானம் இழந்த அநுர அரசு

**விதுரன்**

ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் சித்திரை மாதம் திருப்புமுனைகள் நிகழும் காலப்பகுதியாகியுள்ளது. வலுச்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஏப்ரல் 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட போதிலும், அடுத்த ஒரு வாரத்திற்குள், அதாவது ஏப்ரல் 17ஆம் திகதி அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நிலக்கரி இறக்குமதியில் நிகழ்ந்த ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் சுயாதீன மற்றும் பக்கச்சார்பற்ற செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காகவே பதவியிலிருந்து விலகுவதாக ஜயக்கொடி தனது இராஜினாமாக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேபோன்று, வலுச்சக்தி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய பேராசிரியர் உதயங்க ஹேமபாலவும் அமைச்சரையொத்த காரணங்களை குறிப்பிட்டு பதவியிலிருந்து விலகியுள்ளார்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்ட ஒரு அரசாங்கம், தனது அமைச்சரைப் பாதுகாப்பதற்காக பாராளுமன்றத்தில் போராட்டமின்றி வெற்றி பெற்ற பின்னரும், அதே அமைச்சர் பதவி விலக வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலைமையானது, தற்போதைய ஆட்சியின் நம்பகத்தன்மை குறித்து பாரிய கேள்விகளை எழுப்பியுள்ளது. இது வெறும் தனிநபரின் பதவி விலகல் மட்டுமல்ல, 'தூய்மையான அரசியல்' மற்றும் 'ஊழலற்ற நிர்வாகம்' ஆகிய வாக்குறுதிகளுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கம், நடைமுறை நிர்வாகச் சிக்கல்களில் எவ்வாறு தடுமாறுகிறது என்பதற்கான நேரடிச்சான்றாகும்.

இலங்கையின் தேசிய மின்சாரத் தேவையில் 30சதவீதம் முதல் 40சதவீதம் வரை பூர்த்தி செய்யும் நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையம், நாட்டின் மின்சாரக் கட்டமைப்பின் முதுகெலும்பாகக் கருதப்படுகிறது. 900 மெகாவாட் கொள்ளளவைக் கொண்ட இந்த மின் நிலையம் சீராக இயங்குவதற்கு ஆண்டுக்கு சுமார் 2.25 மில்லியன் மெற்றிக் தொன் நிலக்கரி அவசியமாகும். இருப்பினும், 2025-2026 கொள்வனவின் போது இடம்பெற்ற பாரிய முறைகேடுகள் மற்றும் தரமற்ற நிலக்கரி இறக்குமதி காரணமாக, இந்த மின்நிலையம் தற்போது தொழில்நுட்ப மற்றும் நிதி ரீதியான முடக்கத்தை எதிர்நோக்கியுள்ளது.

அண்மையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை, இந்த நிர்வாகச் சீர்கேடுகளைப் புள்ளிவிபரங்களுடன் தோலுரித்துக் காட்டியுள்ளது.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் தரவுகளின்படி, நிலக்கரி விநியோகஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான தகுதிகாண் அளவுகோல்கள் (Registration Criteria) திட்டமிட்ட முறையில் தளர்த்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, ' Trident Chemphar' என்ற நிறுவனம் பல பில்லியன் ரூபா பெறுமதியான நீண்டகால ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும், அதற்கான பதிவுக்கட்டணத்தில் வெறும் 20 டொலர்களை மாத்திரமே நிலுவையாகச் செலுத்தியிருந்தது.

அதேபோன்று, 'Taranjot Resources ' என்ற நிறுவனத்திற்கு 300,000 மெற்றிக் தொன் நிலக்கரி கொள்வனவுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த 36 மாதங்களில் அந்த நிறுவனம் விநியோகித்த 1,115,900 மெற்றிக் தொன் நிலக்கரியில் 880,000 மெற்றிக் தொன்களுக்கும் அதிகமானது நிர்ணயிக்கப்பட்ட 5,000 GCV (Gross Calorific Value) தரத்தை விடக் குறைவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### விநியோகஸ்தர் பதிவு விபரங்கள்

| விநியோகஸ்தர் | கட்டணம் / விபரம் |
|---|---|
| Potencia LLC-FZ | 5,000 USD (கட்டணம் செலுத்திய திகதி: 18 ஆகஸ்ட் 2025) |
| A2A Trading FZE | 5,000 USD (கட்டணம் செலுத்திய திகதி: 15 ஆகஸ்ட் 2025) |
| Panacape Trading DMCC | 5,000 USD (கட்டணம் செலுத்திய திகதி: 19 ஆகஸ்ட் 2025) |
| Trident Chemphar Ltd. | 4,980 USD (கட்டணம் செலுத்திய திகதி: 19 ஆகஸ்ட் [illegible]) |
| Spiriko Ltd. | செலுத்தப்படவில்லை (பதிவு நிறைவடையவில்லை) |
| Perseverance DMCC | 5,000 USD (கட்டணம் செலுத்திய திகதி: 15 ஆகஸ்ட் 2025) |

இத்தகைய மோசமான பின்னணியைக் கொண்ட நிறுவனங்களுக்கு மீண்டும் ஒப்பந்தங்களை வழங்கியமை, கொள்வனவுச் சபையின் நேர்மையையும், செயற்பாட்டையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இந்தத் தரமற்ற நிலக்கரி கொள்வனவினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நேரடி நிதி இழப்பு சுமார் 2,237.7 மில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இழப்பானது தரக்குறைவான நிலக்கரியைப் எரிக்கும் போது ஏற்படும் வெப்ப ஆற்றல் வீழ்ச்சியினால் (Thermodynamic Inefficiency) உருவாகிறது.

நுரைச்சோலை மின்நிலையத்தின் தரநிலைப்படி, ஒரு கிலோவாட் மணித்தியால மின்சாரத்தை உற்பத்தி செய்ய 375கிராம் நிலக்கரி தேவைப்படும். ஆனால், தரம் குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்தும்போது இந்த அளவு அதிகரித்து, நிலக்கரி கையிருப்பு வேகமாகத் முடிந்து விடுகிறது.

### இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி கையிருப்பில் கணிக்கப்பட்ட இழப்புகள்

| மதிப்பீட்டு காரணி | விபரம் / அளவு |
|---|---|
| 287 MW திறனில் எரிக்கப்பட வேண்டிய தரநிர்ணய தரநிலை அளவு (MT) | 107.61 (மணித்தியாலத்திற்கு) |
| 287 MW திறனில் உண்மையில் எரிக்கப்பட்ட அளவு (MT) | 115.86 (மணித்தியாலத்திற்கு) |
| மணித்தியாலத்திற்கு எரிக்கப்பட்ட மேலதிக நிலக்கரி (MT) | 8.25 |
| மொத்த கையிருப்பு பயன்படுத்தப்படும் நாட்களின் எண்ணிக்கை | 21.5 நாட்கள் |
| கையிருப்பில் எரிக்கப்பட்ட மொத்த மேலதிக நிலக்கரி நிலக்கரி (MT) | 4,259.34 |
| ஒரு மெற்றிக் தொன் நிலக்கரியின் விலை (ரூபாய்) | 38,385 |
| மேலதிக நுகர்வினால் ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட இழப்பு | 163.5 மில்லியன் ரூபாய் |

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ள தகவல்களின்படி, ஒரு கப்பலுக்கு (Ship No. 456 - Ceylon Breeze) மாத்திரம் தரக்குறைபாடுகளுக்காக 2,079,633 அமெரிக்க டொலர்கள் (சுமார் 644.7 மில்லியன் ரூபா) தண்டப்பணமாகக் கணிக்கப்பட்டுள்ளது. இதுவரி செலுத்தும் மக்களின் பணம் எவ்வாறு நிர்வாகத் தவறுகளால் வீணடிக்கப்படுகிறது என்பதற்குச் சிறந்த உதாரணமாகும்.

நிதியியல் இழப்புகளுக்கு அப்பால், தொழில்நுட்ப ரீதியாக நுரைச்சோலை மின்நிலையம் பாரிய அச்சுறுத்தல்களைச் சந்தித்துள்ளது. நிலக்கரியில் உள்ள அதிகப்படியான 'பயரைட்' (Pyrite) தாதுக்கள் காரணமாக, நிலக்கரி அரைக்கும் இயந்திரங்களில் (Mills) உராய்வு ஏற்பட்டு தீ விபத்துக்கள் சம்பவித்துள்ளன.

கடந்த மார்ச் 5ஆம் திகதி மின்நிலையத்தின் 3ஆவது அலகில் ஏற்பட்ட தீ விபத்து இதற்கொரு சான்றாகும். மேலும், தரமற்ற நிலக்கரியினால் மின் உற்பத்தி அலகுகளின் திறன் 300 மெகாவாட் என்ற அளவிலிருந்து 150-170 மெகாவாட் வரை வீழ்ச்சியடைந்தது.

இந்த மின்சாரப் பற்றாக்குறையை ஈடு செய்ய, அரசாங்கம் அதிக விலைகொடுத்து டீசல் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசாங்க பொது முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்குழுவின்) விசாரணையில் வெளிவந்த தகவல்களின்படி, இத்தகைய இழப்புகள் மின்சாரக் கட்டணத்தில் சுமார் 2.2சதவீத அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

### கப்பல் வருகையில் ஏற்பட்ட தாமதங்கள் (Puttalam Anchorage)

| கப்பல் எண் | கப்பலின் பெயர் | எதிர்பார்க்கப்பட்ட வருகை | உண்மையான வருகை | தாமதம் (நாட்கள்) |
|---|---|---|---|---|
| 445 | Porto Fiscardo | 15 செப். 2025 | 21 செப். 2025 | 06 |
| 447 | Ivy Gold | 26 செப். 2025 | 08 அக். 2025 | 12 |
| 449 | Hua Rong 26 | 08 அக். 2025 | 25 அக். 2025 | 17 |
| 460 | Unicorn | 12 ஜன. 2026 | 30 ஜன. 2026 | 18 |
| 466 | Yasa Mars | 11 பெப். 2026 | 03 மார்ச் 2026 | 20 |
| 467 | Ultra Confidence | 16 பெப். 2026 | 11 மார்ச் 2026 | 23 |

பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ள அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மற்றொரு முக்கிய குற்றச்சாட்டு, அவர் 2016ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் உரக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய போது 88 இலட்சம் ரூபா நிதி இழப்பை ஏற்படுத்தினார் என்பதாகும்.

இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், அவர் அமைச்சரவையில் நீடிப்பது தார்மீக ரீதியாகத் தவறானது என்பதே நம்பிக்கையில்லாப் பிரேரணையின் சாராம்சமாக இருந்தது. இருப்பினும், ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க 'நாங்கள் நிலக்கரியைச் சாப்பிட்டுப் பார்த்து வாங்கவில்லை' எனக் கூறியதன் மூலம், அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் கட்டப்பாட்டையும் அமைச்சரவையின் தலைவர் என்ற வகையில் கூட்டுப் பொறுப்பையும் தட்டிக்கழித்துள்ளார்.

ஒரு கொள்வனவின் போது சர்வதேசத் தரக்கட்டுப்பாடுகள் (ISO) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வக அறிக்கைகளைப் (Accreditation) பின்பற்றுவது அரசாங்கத்தின்

தொடர்ச்சி: பக்கம் 12



# அன்னை பூபதி; ஈழத்திற்காய் களமாடிய அன்னையர்களின் குறியீடு

தீபச்செல்வன்

ஈழ மண்ணையும் ஈழ விடுதலையையும் நேசித்த போராளிகளை தங்கள் உயிரிலும் மேலான உத்தமப் பிள்ளைகளாக நேசித்து அன்பு பாராட்டினார்கள். விடுதலைப் போராட்ட காலத்தில் போராளிகளுக்கு உணவைக் கொடுத்து அன்பையும் கரிசனையையும் செலுத்திய பல அன்னையர்களை பார்த்திருக்கிறோம். ஈழ நிலத்தின் எங்கோ ஒரு இடத்தில் ஒரு போராளியின் தாய் இருக்கும் போது எங்கோ ஒரு நிலத்தில் இருக்கும் இன்னொரு தாய், அந்தப் போராளிக்கு பெற்ற அன்னைபோல் அளித்த அன்பும் ஆறுதலும் அடைக்கலமும் ஈழ விடுதலையின் உன்னத பக்கங்களாகும்.

### தாயெனும் மாபெரும் சக்தி

எல்லா உயிரினங்களிலும் தாய் மகத்தான சக்தியாக மாபெரும் உன்னதமாக கருதப்படுகிறாள். பிராணிகளில்கூட தாய்மையின் மகத்துவத்துவம் உணர்த்தும் காட்சிகளை டிஜிட்டல் யுகத்தில் பார்க்கிறோம். அன்னை இந்தப் பிரபஞ்சத்தையும் வாழ்வையும் உருவாக்குபவள். ஈழ விடுதலைப் போராட்டக் களத்திலும் அன்னையர்கள் மகத்தான சக்தியாகவே கருதப்படுகின்றனர். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈரமான அன்னையர்களும் உண்டு, வீரமான அன்னையர்களும் உண்டு. அவர்கள் எல்லா வகையிலும் ஈழ விடுதலைப் போராட்டத்தை தாங்கியிருந்தார்கள்.



அன்னையர்கள் தலைமுறைகளால் பூமியை உருவாக்கியவர்கள். தங்கள் மாசற்ற தாய்மையால் எல்லோராலும் நேசிக்கப்படுபவர்கள். அன்னையர்கள் தவித்து வாழும் தேசங்களில் வடக்கு கிழக்கு தமிழ் தேசமும் ஒன்று. ஈழம் முழுக்க முழுக்க அன்னையர்களின் தவிப்பாலும் கண்ணீராலும் ஏக்கத்தாலும் காத்திருப்பினாலும் மூழ்கியதொரு தேசம். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தொடரும் நிலையிது.

### ஈழ அன்னையரின் குறியீடு

போராளிகள் தங்கள் வீடுகளுக்கு வந்திருக்கும் போது இராணுவமும அங்கே போராளிகளைத் தேடி வர, அதனை வீரமாகச் சமாளித்து பல போராளிகளைக் காப்பாற்றிய அன்னையர்களின் தேசம் இது. இன்றைக்கு ஈழ நிலத்தில் அன்னையர்கள் நடாத்துகின்ற போராட்டத்திற்கு பெரு அர்த்தம் இருக்கிறது. அவர்கள்தான் நீதிக்கும் விடுதலைக்குமான போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் ஈழ விடுதலைக்காக அன்றைக்கு இளைஞர்களும் யுவதிகளும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட வேளையில், அன்னைபூபதி அவர்கள் தியாக வழியில், அகிம்சைப் பாதையில் ஈழ விடுதலைக்கு ஆதரவாக தன் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார். ஈழப் போராளிகளுக்காக ஒரு அன்னையாக ஈழ அன்னையர்களின் குறியீடாக அவர் முன்னெடுத்த போராட்டம், ஈழ விடுதலையின் அன்னையர்களின் பங்களிப்பையும் அதன் விரிந்த பக்கங்களையும் காலத்தின் முன் நிறுத்துகிறது.

ஈழத்தில் இப்போது நடக்கும் போராட்டங்களைப் பார்க்கும்போது அர்ஜன்டீனா அன்னையர்களின் போராட்டமே நினைவுக்கு வருகிறது. அந்நாட்டில் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டபோது, அவர்களை மீட்க அன்னையர்கள் தெருவுக்கு வந்து போராட்டங்களை நடத்தினர். சைக்கிளில் சென்ற தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டதை நினைவுபடுத்தி, கடதாசிச் சைக்கிள்களை செய்து வைத்தபடி போராட்டத்தில் ஈடுபட்டனர். மிகவும் துயரமும் மனித மாண்புக்கு இழிவு சேர்க்கும் செயலுமாக, போராட்டத்தில் ஈடுபட்ட அன்னையர்களும் காணாமல் ஆக்கப்பட்டனர். ஈழத்தில் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்காக அன்னையர்கள் தம்மை உருக்கி காணாமல் போனபடி போராட்டத்தை நடத்துவதற்கு ஒப்பான தொரு செயலே இது.

### மட்டக்களப்பு தந்த அன்னை

1988ஆம் ஆண்டு இந்தியப் படைகளுக்கு எதிராக உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தவர் அன்னை பூபதி. இவர் பத்துப் பிள்ளைகளின் தாய். ஆனாலும் தன் தாயகத்து பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என்று உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்தவர். இவர் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் அன்னையர் முன்னணியின் முதன்மைச் செயற்பாட்டாளர். இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் யுத்தம் நடைபெற்றபோது, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும், உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி அன்னையர் முன்னணி சார்பில் போராட்டத்தை மேற்கொண்டார்.

அன்னையர் முன்னணியின் கோரிக்கைக்கு இந்தியப் படைகள் செவிசாய்க்கவில்லை. அன்னையர் முன்னணிக்கும் இந்தியப் படைகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றன. 1988இல் ஜனவரி 4ஆம் திகதி திருகோணமலையிலும் பெப்ரவரி 10ஆம் திகதி கொழும்பிலும் அன்னையர் முன்னணிக்கும் இந்தியப் படைகளுக்கும்இடையில்பேச்சுவார்த்தைகள்இடம்பெற்றன. அன்னையர் முன்னணியின் கோரிக்கைகளை இந்தியப் படைகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையடுத்து சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்த அன்னையர் முன்னணி தீர்மானித்தது.

### உயிர்நீத்த தியாகத்தாய்

சாகும்வரையிலான போராட்டத்திற்கு பல அன்னையர்கள் முன்வந்தனர். எனினும் ஒருவர் போராட்டத்தில் ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டது. இதன்படி குலுக்கல் முறையில் போராட்டத்தில் ஈடுபடுபவர் தெரிவு செய்யப்பட்டார். முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார். பெப்ரவரி 14 மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் உண்ணா நோன்பு இருந்தபோது அன்னம்மா டேவிட் கடத்தப்பட்டமை காரணமாக இவரது உண்ணாவிரதப் போராட்டம் தடைப்பட்டது. இதனையடுத்தே அன்னை பூபதி மார்ச் 19 போராட்டத்தில் குதித்தார்.



போராட்டத்தில் ஈடுபட்ட அன்னை பூபதி “சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது” என்று கடிதம் எழுதி வைத்தார். நீர் மட்டும் அருந்தியபடி, உணவை விடுவித்து போராட்டத்தில் ஈடுபட்டார் அன்னை பூபதி. உண்ணா விரதப் போராட்டத்திற்கு ஆதரவளித்தவர்கள், அன்னை பூபதியின் பிள்ளைகள் கடத்தப்பட்டபோதும் இவரது உண்ணிவிரதப் போராட்டம் தொடர்ந்தது. இந்திய படைகளினால் இவரது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் சரியாக ஒரு மாத்தின் பின்னர் ஏப்ரல் 19 அன்னை பூபதி உயிர் துறந்தார்.

தொடர்ச்சி: பக்கம் 12

# இந்திய மீனவர்களின் இரட்டைமடி இழுவைப் படகுகளினால் அழிவடையும் வடக்கு கடல்வளம்



**நிபந்தனைகள்-**

**1) பாரம்பரியமாக மீன்பிடியில் ஈடுபடுகின்ற கடற் பகுதிகளில் இழுவைமடி மீன்பிடித் தொழிலை மேற் கொள்ள முடியாது.**

**2) நாரா நிறுவனத்தினால் வரையறுக்கப்பட்டு அனுமதி யளிக்கப்பட்ட சேத்து கடற்பரப்பில் மாத்திரம் இழுவைப் படகு மூலமான மீன்பிடியில் ஈடுபட முடியும்.**

**3) மூன்று மாத கால அவகாசம் என்ற அடிப்படையில் கால நீடிப்புச் செய்யப்பட்டு ஒரு கடிவாளத்தை இட்டப்பட்டது.**

போன்ற நிபந்தனை அடிப்படையிலேயே உள்ளூர் இழுவைப் படகுகளுக்கு அனுமதியளிக்கப்பட்டு செய்படுத்தப்பட்டது. ஆனால் கால நீடிப்பு தற்போதும் தொடர்ந்து கொண்டே செல்கிறது.



அதே போன்று இந்திய - தமிழக மீனவர்களுடனும் இந்திய அரசத் தலைவர்களுடனும் பேச்சுக்களை நடாத்தி னோம். அதன் போது தமிழக மீனவர்கள் தமக்கான கால அவகாசத்தையே கோரி நின்றனர். தாம் மாற்றுத் தொழிலுக் குச் செல்லும் வரை மூன்றாண்டுகள் கால அவகாசம் கோரியிருந்தனர்.

அத்தோடு நாட்டுப் படகில் பாரம்பரிய மீன்பிடி முறையினை மேற்கொள்ளவும் அனுமதி கோரியிருந்தனர். அதற்கு டக்களஸ் தேவானந்தா இலங்கை கடற்பரப்பில் ஒரு வினாடி கூட அனுமதிக்க முடியாது என மறுத்திருந்ததாக தெரிவித்தார்.

மறுபுறம், 1974ஆம் ஆண்டு இலங்கை-இந்திய உடன்படிக்கைப்படி, சர்வதேச கடற்பரப்பு எல்லைக்கோடு (IMBL) தீர்மானிக்கப்பட்டது. இது, பாக்கு நீரிணையை இறைமையுள்ள இரண்டு நாடுகளின் கடற்பரப்புகளாகப் பிரித்தது. இரு நாட்டு மீனவர்களும், தொடர்ந்தும் குறுகிய காலத்துக்குப் பாரம்பரியக் கடற்பரப்பில் மீன்பிடிக்க உடன் பாடு அனுமதித்தது. எனினும், மீன்பிடிப்பு அந்தக் கால வரை யறைக்குப் பின்னும் தொடர்ந்தது.

பாரம்பரிய மீன்பிடி முறை தொடர்ந்தளவும், அந்த மீன்பிடிப்பு பற்றி இரு தரப்பு மீனவர்கட்கும் தகராறு இருக்கவில்லை. இழுவைப் படகுகளின் வருகையுடனேயே முரண்பாடு எழுந்தது. எனினும் இன்று, பாரம்பரிய மீன்பிடி முறையிலில்லாமல், இழுவைப் படகுமுறையில் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள், அந்த எல்லைக்கோடு சட்ட விரோதமானது என்று அதை ஏற்கமறுத்து தமது பாரம்பரிய மீன்பிடிக் கடற்பரப்பை விட்டுத்தர முடியாதென்றுக் கூறு கிறார்கள்.

1980களில், இலங்கையில் வலுத்த யுத்தம், இலங்கை மீனவர்களின் வாழ்க்கையைப் பாதித்தது. குறிப்பாக, மீன்பிடிக்கு விதித்த தடைகளும் கட்டுப்பாடுகளும், வடபகுதி மீனவர்களின் மீன்பிடியைக் கிட்டத்தட்ட இல்லாமலாக்கியது. அதை, இந்திய மீனவர்கள் வாய்ப்பாக்கினர்.

1990ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே, இலங்கை அரசாங்கம், வடக்கில் ஆழ்கடல் மீன்பிடியை முற்றுமுழுதாகத் தடை செய்தது. மேலும், உயர் பாதுகாப்பு வலயங்கள் மீன்பிடிக்கு வாய்ப்பான பாரம்பரிய மீன்பிடிக் கடற்கரைகளை உள்வாங்கியமையும், வடக்கில் பாரிய மீன்பிடி வீழ்ச்சிக்கு உதவியது. 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2005 வரை, போர்நிறுத்த உடன்பாடு நடைமுறையிலிருந்த காலத்தில் மட்டும், வடபகுதி மீனவர்கட்குக் குறையளவான ஆழ்கடல் மீன்பிடி அனுமதிக்கப்பட்டது.

1982ஆம் ஆண்டு, வடபகுதி மீன்பிடியின் அளவு, இலங்கையின் மொத்த மீன்பிடியில் இருபத்தைந்து சதவீதமாகும். இது, 2011ஆம் ஆண்டு, வெறும் ஆறு சதவீதமாகக் குறைந்து, 2015ஆம் ஆண்டளவில் பதினொரு சதவீதமாகி யுள்ளது. இலங்கையின் உள்நாட்டு யுத்தமே இதற்கான அடிப்படைக் காரணமாகும். இந்நிலை, வடபகுதி மீனவர்களின் மீன்பிடியை இல்லாமல் செய்ததுடன், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி மீன்பிடிக்க வழிசமைத்தது.

ஆனாலும் கரையோரங்களை அண்மித்த அல்லது மீன் வளத்தை அழிவடையச் செய்யும் மீன்பிடியை இந்திய மீனவர்களின் இரட்டைமடி இழுவைப் படகுகளால் மேற்கொள்ள முடியவில்லை.



இலங்கை-இந்திய மீனவரிடையான சிக்கலுக்கு, பல பரிமாணங்கள் உள்ளன. அவற்றில் பிரதானமானது, இலங்கைக்குரிய கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதாகும். குறிப்பாக, உள்நாட்டு யுத்தம் முடிந்து, ஆழ்கடல் மீன்பிடிக்கு விதித்திருந்த தடைகள் நீங்கிய நிலையில், இலங்கையின் ஆட்புல எல்லைக்குட்பட்ட, வடபகுதி மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில், இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பது பாரிய பிரச்சினையாகும்.

பிரச்சினையை இரு பகுதியினரும் நோக்கும் விதம் வேறுபடுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து, இந்திய அயலுறவுகளுக்கான அமைச்சராக இருந்த சுஷ்மா

எழுத்தாக்கம் – ஊடகவியலாளர்
**மு. மதிவாணன்**

சுவராஜிடம் கேட்டபோது, "மீனவர்கள் மீன்களைத் தேடிச் செல்வோர். எங்கே மீன் உண்டோ அங்கே அவர்கள் மீன் பிடிப்பார்கள்? அவர்களுக்குத் தேச அரசுகளின் எல்லை பற்றிய கவலையோ அக்கறையோ கிடையாது" என்றார். இந்தியாவின் பொதுவான நிலைப்பாடு இதுவே.

பாக்கு நீரிணை மீன்பிடியில் உள்ள சிக்கல்களை ஆராயும் இந்திய ஆய்வாளர்களும், இந்த நிலைப்பாட்டையே எடுக்கிறார்கள். இது, மிக ஆபத்தானதும் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதுமான நிலைப்பாடு என்பதை நாம் மறக்கலாகாது.



இலங்கையில் தடைக்குட்பட்ட இழுவைப் படகு களை, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் பயன் படுத்துவதால், இலங்கை மீனவர்கள் கடலின் மேற்பரப்பை அண்டி விரிக்கும் வலைகளை, இந்திய இழுவைப் படகுகள் வாரிச்சென்று கடலடிக்கு அமிழ்த்துகின்றன. அடிக் கடலுக்குள் இழுபடும் வலைகள், பெரும்பாலும் தொலைந்து போகின்றன. எஞ்சுகிற வலைகளும் பாவனைக்குதவாது போவதோடு, மீனவர்களது அன்றாட வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகிறது. இதனால் இந்திய இழுவைப் படகுகள் மீன்பிடிக்கும் போது, வடபகுதி மீனவர்கள் மீன்பிடிக்க முடிவதில்லை. இதனால், இழுவைப் படகுகள் மீன்பிடிக்கும் நாள்களில், வடபகுதி மீனவர்கள் பெரும்பாலும் மீன்பிடிப்ப தில்லை.

இந்திய மீனவர்களின் பெரும் இழுவைப் படகுகள், நாட்டின் பவளப் பாறைகளையும் கடற் படுக்கையை யும்,மீன்களையும் அழிக்கின்றன. இது குறித்து ஆய்வு செய்யும் பேராசிரியர் ஒஸ்கார் அமரசிங்க, கடல் அட்டைகளையும் பிற கடல்வாழ் உயிரிகளையும் இந்தியாவுக்குக் கொண்டு செல்வதால், இலங்கைக்கு வருடத்துக்கு ஐநூறு கோடி ரூபாய் நட்டம் ஏற்படுவதாகக் கணித்துள்ளார். இது, 2011ஆம் ஆண்டுத் தரவுகளின் அடிப் படையிலான கணிப்பீடு. இத்தொகை, இப்போது இன்னும் அதிகமாக இருக்கலாம்.

இருதரப்பு மீனவர்கட்குமிடையில் தொடர்ச்சி யாக நடைபெறும் பேச்சுகள், சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களுடன் உடன்பாட்டையும் பேச்சளவிலேயே எட்டியுள்ளன. ஆனால், அவை நடைமுறைப்படுத்தப்

**தொடர்ச்சி: பக்கம் 12**

# தியாகி திலீபனின் கோரிக்கையை ஏற்காத இந்தியா; அன்னை பூபதியின் கோரிக்கையை ஏற்பார்கள் என்ற எண்ணம் ஏன் வந்தது.?

பா.அரியநேத்திரன்

தியாகி திலீபனின் கோரிக்கையை ஏற்காத இந்திய அரசின் சதியால் தியாகச்சாவை தழுவிக்கோண்டார் தியாகி திலிபன். அவர் உயிர் நீத்து சரியாக 06, மாதம்,13, தினங்களில் அன்னை பூபதியின் கோரிக்கையை ஏற்பார்கள் என நினைத்து அன்னைபூபதியை சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டம் நடத்துவதற்கு அன்னையர் முன்னணி ஏன்முன்வந்தார்கள்?

24, அகவை இளைஞனின் தியாகத்தை உதாசீனம் செய்த இந்திய நாடு 56, அகவை அன்னை பூபதியின் தியாகத்தை மதிப்பார்கள் என எப்படி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி எடைபோட்டது?



1987, யூலை,29, ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் பாரதப்பிரமர் ராஜீவ் காந்திக்கும், இலங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தனாவுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது .

அமைதிப்படை என்ற பெயரை சூட்டி இந்திய இராணுவம் இலங்கையில் 1987,யூலை,30, ல் வடகிழக்கு முழுவதும் ஆக்கிரமித்தது.

1987, ஆகஸ்ட் ,04, ல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சுதுமலையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையாற்றினார்.

அதில் தெளிவாக "தமிழரின் உடன்பாடு இன்றியே இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது" என கூறினார். இந்த உரை சுதுமலை பிரகடனம் எனப்படுகிறது.

இந்த உரை இடம்பெற்று மறுநாள் 1987,ஆகஸ்ட் 05, ல் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை இந்தியப்படையினரிடம் கையளித்தனர் .

இந்திய அரசின் ஒப்பந்தம் தமது நலனும், இலங்கை அரசின் நலனும் கொண்டதாக உள்ளது. ஈழத்தமிழர்களின் நலன் சார்ந்து எதுவுமே இல்லை என்பதை உணர்ந்த விடுதலைப்புலிகள் ஆயுதங்களை உங்களை நம்பி ஒப்படைத்துவிட்டோம் ஆனால் தமிழினத்தின் உடனடி விடயங்களில் அக்கறை காட்ட இலங்கை அரசை நிர்பந்திக்கும் படியாக காந்தீயவழியில், அறப்போரை, அகிம்சாவாதத்தை மதிக்கின்ற நாட்டுக்கு அதே அகிம்சை ரீதியாக ஆயுதம் ஏந்தி போராடிய விடுதலைப்போராளி ஒருவரைக்கொண்டு சாகும்வரை உண்ணாவிரதம் மூலமாக அறவழிப்போராட்டம் செய்வதன் மூலமாக நிச்சயமாக இந்திய அரசு அதனை கருத்தில் கொள்ளும் என்ற நம்பிக்கையில் 1988, செப்டம்பர்,19, ல் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளி தியாகி திலிபன் ஐந்து அம்சக் கோரிக்கைகள் முன்வைத்து உண்ணாவிரதத்தை யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் முன்றலில் தொடங்கினார்.




**இந்த ஐந்து கோரிக்கைகளும் விடுதலைப்புலிக ளின் கோரிக்கைகள் என்பது குறிப்பிடத்தக்கது.**

1. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.
2. தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.
3. மறுவாழ்வு என்ற பெயரில் தமிழர்களின் தாயகப் பகுதிகளில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் அமைப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
5. இடைக்கால நிர்வாகச் சபை அமைக்கப்படும் வரை, இடைக்காலக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

ஈழத்தமிழினத்தின் தாயத்தில் எதிர் கொள்ளும் அன்றாட பிரச்சனைகளாக இனம்காணப்பட்ட இந்த கோரிக்கையையே அன்று தியாகி திலீபன் முன்வைத்தார். தமிழீழம் கேட்டு உண்ணாவிரதம் இருக்கவில்லை சரியாக 12, தினங்கள் நீர் கூட அருந்தாமல் அந்த போராளி திலிபன் 1987, செப்டம்பர்,26, ல் எம்மை விட்டு ஆகுதியானார்.

தியாகி திலீபனின் இந்த கோரிக்கையை மதிக்காமல் அவரின் உயிர் போக காரணமான இந்தியாவின் செயல் உலகத்திடம் இந்தியாவின் சதியை வெளிக்காட்டியது.



தியாகி தீலிபனின் உண்ணாவிரதத்தை உதாசீனம் செய்த இந்தியநாடு அவர் விடுதலைப்புலிகளின் போராளி என்பதால் தான் அதனை கருத்தில் எடுக்காமல் விட்டிருக்கலாம், தியாகி திலீபனின் ஐந்து கோரிக்கைகளும் இலங்கை அரசுடன் இணங்கி இந்தியா அழுத்தம் கொடுத்து நிறைவேற்றும் தீர்மானங்கள் என்பதால் அதனை இலங்கை அரசுமீது காரணம் காட்டி தாம் உத்தமர்கள் என தப்பிக்க கூட தியாகி திலிபனின் நியாயமான கோரிக்கைகளை இந்தியா தட்டிக்கழித்து இருக்கலாம் இதனை கருத்தில் கொண்டே கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் போராளி அல்லாத ஒரு சாதாரணகுடும்பத்தலைவியான தமிழ் தாய் ஒருவர் மூலமாக இலங்கை அரசை நோக்கி அழுத்தம் கொடுக்காத இந்தியாவால் மட்டும் மிக இலகுவாக செய்யக்கூடிய இரண்டே இரண்டு கோரிக்கைளை முன்வைத்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி சாகும்வரை உணவுத்தவிர்ப்பு போராராட்டம் நடத்த தீர்மானித்தனர்.

**அந்த இரண்டு மிகவும் இலகுவான இந்தியாவால் செய்ய கூடிய கோரிக்கைகளான**

1. உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.
2. விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும்.

போர்நிறுத்தம் இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளுடன் போரிடும் போரை நிறுத்தவேண்டும், அதன்பின்னர் விடுதலை புலிகளுடன் இந்திய அரசு பேச்சுவார்த்தைக்கு செல்லவேண்டும். இந்த கோரிக்கை இரண்டுமே இலங் கையை இழுக்கவில்லை.

இந்த கோரிக்கைதான் அன்னையர் முன்னணியின் கோரிக்கை இந்த கோரிக்கையுடன் உண்ணாவிரதம் யார் இருப்பது என்பது குறித்து கடும்போட்டி நிலவியது. அன்னை பூபதியும் முன்னுரிமை கோரினார். அன்னம்மா டேவிட்டும் முன்னுரிமை கோரினார். இதனால் சீட்டுக்குலுக்கிப்போட்டு ஒருவரை தெரியலாம் என்று இறுதி முடிவாக சீட்டு மூலம் அன்னமா டேவிட் தேரிவானார்.

1988,பிப்ரவரி,19,ல் அன்னம்மா டேவிட் மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயில் முன்பாக சாகும்வரை தனது உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். அன்னம்மா டேவிட் மரணமடைந்தால் , அதனை ஏற்பாடு செய்தவர்கள் மீது வழக்குப் போடப்படும் என இந்திய அமைதிப்படை மிரட்டியது. ஆனாலும் உண்ணாவிரதம் தொடர்ந்த நிலையில், அவரின் பிள்ளைகள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை எச்சரித்து பலவந்தமாகத் தங்களது தாயாரை உண்ணாவிரதத்தில் ஈடுபடுத்தி உள்ளார்கள் என்றும் தங்கள் தாயை மீட்டுத்தாருங்கள் என்றும் அவர்களின் கையொப்பத்துடன் கடிதம் எழுதி இந்தியப்படை வாங்கியது அந்தக் கடிதத்தை காட்டி அன்னம்மா டேவிட் அவர்களை உண்ணாவிரத மேடையில் இருந்து இந்தியப்படை தூக்கிச் சென்றது.

அதன்பின்னர் ஏறக்குறைய ஒரு மாதம் கடந்த நிலையில் 1988, மார்ச்,19, சனிக்கிழமை காலை 10,45, மணிக்கு அன்னைபூபதி உண்ணா நோன்பு ஆரம்பித்தார். மாமாங்கப்பிள்ளையார் ஆலய குருந்த மரத்துக்கு கீழ் அமைத்த மேடையில் ஏறி தான் சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன். எனக்கு சுயநினை விழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக் கூடாது" எனக் கடிதம் எழுதி ஏற்பாட்டாளர்களிடம் கொடுத்த பின்னர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.




முதல் நாளே நாலா திசையிலும் இருந்து மக்கள் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் குவிந்தனர் அடுத்தடுத்த தினங்களில் மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம் பகுதியில் இருந்தும் சனத்திரள் கூடியது அன்னையர் முன்னணி அடையாள உண்ணாவிரதத்தைத் தொடர் உண்ணாவிரதமாக்கியது. இதன் எழுச்சி கண்டதும், பிரதமர் ராஜீவ் காந்தி "அமைதிப்படை தமிழ் மக்களுக்கு எதிராகப் போராடவில்லை; புலிகளுக்கு எதிராகவே போரடுகிறது" என்று இந்திய ஊடகங்களில் கூறினார்.

தொடர்ச்சி: பக்கம் 13

வாராந்த மின்னிதழ் | இதழ் 387 | மலையகம்
சனி, 18 ஏப்ரல், 2026 | பக்கம் 08

# தேசத்தைக் காக்கும் தேயிலைத் தாரகைகள்:
# கொழுந்து பறிக்கும் கைகளுக்கு கடல் கடந்தும் இன்னல்கள்

மருதன் ராம்



இலங்கையின் பொருளாதார வரலாற்றில் மலையகப் பெருந்தோட்டச் சமூகம் என்பது தவிர்க்க முடியாத ஒரு சக்தியாகும். குறிப்பாக, 'தேயிலை' என்னும் கறுப்புத் தங்கம் இலங்கையின் அந்நியச் செலாவணியில் பெரும் பங்கை வகிக்கிறது என்றால், அதற்குப் பின்னால் இருக்கும் உழைப்பு மலையகப் பெண்களுடையதாகும்.

அண்மைய தசாப்தங்களில், இந்தப் பெண்கள் தோட்டங்களுக்குள் மாத்திரம் முடங்கிவிடாமல், நாட்டின் அந்நியச் செலாவணித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக கடல் கடந்தும் சென்று உழைக்கின்றனர். 2024 ஆம் ஆண்டின் தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் தரவுகள், மலையகப் பெருந்தோட்டப் பெண்களின் இந்தப் புதிய பரிமாணத்தை உறுதிப்படுத்தியுள்ளன.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 10-12 சதவீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை தேயிலைத் துறை வழங்குகிறது. இத்துறையின் வெற்றி என்பது முழுமையாக பெண்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. தேயிலை கொழுந்து பறித்தல் என்பது மிகவும் நுணுக்கமான வேலையாகும். இயந்திரமயமாக்கல் இன்னும் முழுமையாக வெற்றிபெறாத நிலையில், 'இரண்டு இலைகளும் ஒரு மொட்டும்' என்ற தரமான பறிப்பு முறைக்கு பெண்களின் மென்மையான கரங்கள் இன்றியமையாதவை.



கடும் மழை, அட்டைக்கடி மற்றும் குளிரான காலநிலை ஆகியவற்றுக்கு மத்தியிலும், நாளொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட எடையை எட்ட அவர்கள் மேற்கொள்ளும் உழைப்பு, இலங்கையின் தேயிலையை சர்வதேச ரீதியாக 'சிலோன் டீ' என்ற பிராண்ட் மதிப்பைப் பெற்றுக்கொள்ள அடிப்படையாக அமைகிறது. தோட்டத் தொழிலாளர்களின் ஊதியம் நீண்டகாலமாக விவாதத்திற்குரிய ஒன்றாக இருந்தாலும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெருந்தோட்டத் துறை வழங்கும் பங்களிப்பில் 70 சதவீதத்திற்கும் அதிகமான உழைப்பு பெண்களுடையதாகும்.

## மலையகத்தில் புதிய போக்கு: வெளிநாட்டுப் புலம்பெயர்வு

2024 ஆம் ஆண்டின் தரவுகளின்படி, இலங்கையிலிருந்து 672,249 நபர்கள் தற்காலிகமாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இதில் தேசிய ரீதியாக ஆண்களின் எண்ணிக்கை 61.4 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தாலும், பெருந்தோட்டத் துறையில் மாத்திரம் ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை உயர்ந்து காணப்படுவது ஒரு முக்கியமான மாற்றமாகும். தேசிய ரீதியில் ஆண்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்கின்ற போதிலும் மலையக பகுதிகளில் பெண்கள் தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு பல காரணங்கள் உள்ளன.



மலையகத்தில் ஆண்களின் வருமானம் பெரும்பாலும் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளுக்குப் போதுமானதாக இருப்பதில்லை. குடும்பத்தின் கடன் சுமையை குறைக்க அல்லது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக பெண்கள் துணிச்சலாக வெளிநாடு செல்ல முற்படுகின்றனர். அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களுக்கான தேவை அதிகமாக இருப்பதும், அதற்கான முகவர் நடைமுறைகள் எளிதாக இருப்பதும் மலையகப் பெண்கள் இத்துறையைத் தேர்ந்தெடுக்கக் காரணமாகின்றன.

## வெளிநாட்டுப் பணவனுப்பல் மற்றும் பொருளாதாரப் பலம்

இலங்கை கடந்த காலங்களில் எதிர்கொண்ட கடும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு வெளிநாட்டுப் பணவனுப்பல் மிக முக்கிய காரணியாக இருந்தது. 2024 ஆம் ஆண்டின் தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் அறிக்கையின்படி, வெளிநாடு செல்லும் பெண்களில் 34.3 சதவீதத்தினர் குவைத் நாட்டைத் தெரிவு செய்கின்றனர்.

இலங்கையின் மலையகப் பெண்கள் அங்கே ஈட்டும் ஒவ்வொரு டினாரும் இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பை அதிகரிக்க உதவுகிறது. வெளிநாட்டிலிருந்து பெண்கள் அனுப்பும் பணம் நேரடியாக கிராமப்புற மற்றும் தோட்டப்புறப் பொருளாதாரத்தைச் சென்றடைகிறது. இதன் மூலம் தோட்டப்புறங்களில் சிறு வணிகங்கள் மேம்படுதல், பிள்ளைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படுதல் போன்றவை நிகழ்கின்றன.

இவ்வாறு சாதக காரணிகள் காணப்படுகின்ற போதிலும் வீட்டு பணிப்பெண்களாக மத்திய கிழக்கு உள்ளிட்ட நாடுகளுக்கு செல்கின்ற மலையக பெண்கள் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். அரபு நாடுகளுக்கோ அல்லது பிற நாடுகளுக்கோ செல்லும் போது, அங்கிருக்கும் உள்ளூர் மொழியை சரியாகப் பேசத் தெரியாதது ஆரம்பத்தில் பெரும் தடையாக அமைகிறது.

இது எஜமானர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படவும், வேலையைச் சரியாகச் செய்ய முடியாமல் போகவும் காரணமாகிறது. பல வீடுகளில் போதிய ஓய்வின்றி 18 மணித்தியாலங்கள் வரை வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். உடல் ரீதியான தாக்குதல்கள், மன ரீதியான சித்திரவதைகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகும் அபாயம் உள்ளது.

குடும்பத்தைப் பிரிந்து அறிமுகமில்லாத சூழலில் இருப்பதால் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் கவலை மலையக பெண்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது. ஒப்பந்தத்தில் கூறப்பட்ட ஊதியம் வழங்கப்படாமை அல்லது சம்பளம் தாமதப்படுத்துதல் போன்ற சிக்கல்கள் எழுகின்றன. வேலை பெற்றுத் தருவதாகக் கூறும் இடைத் தரகர்கள் அதிகப் பணம் வசூலிப்பதோடு, தவறான தகவல்களைக் கூறி அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

வெளிநாடுகளில் பணியாற்றும் பல பெண்களுக்குத் தங்களின் அடிப்படை உரிமைகள் அல்லது தங்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் யாரை அணுக வேண்டும் என்பது தெரிவதில்லை. கடவுச்சீட்டு எஜமானர்களால் பறிமுதல் செய்யப்படுவதால், அவர்களால் நினைத்த நேரத்தில் வெளியேறவோ அல்லது உதவி கோரவோ முடிவதில்லை. அவர்கள் அனுப்பும் பணத்தைச் சரியான முறையில் முதலீடு செய்யத் தவறுவதால், மீண்டும் நாடு திரும்பும்போது அதே வறுமை நிலையிலேயே இருக்க வேண்டிய சூழலும் ஏற்படுகிறது.



தாய்மார்கள் வெளிநாடு செல்வதால், வீட்டில் உள்ள பிள்ளைகளின் பராமரிப்பு மற்றும் கல்வி பாதிக்கப்படக்கூடிய சூழல் நிலவுகிறது. உதாரணமாக இலங்கையையே உலுக்கிய ஒரு பிரதான சம்பவமாக மலையகத்தைச் சேர்ந்த ஒரு பெண் சவுதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்ற போது அங்கு அவர் சரியாக வேலை செய்யவில்லை என்று கூறி, அவரது எஜமானர் அவரது கை மற்றும் கால்களில் 20-க்கும் மேற்பட்ட இரும்புக் ஆணிகளை அடித்து சித்திரவதை செய்தார்.



அவர் நாடு திரும்பிய பின்னரே அறுவை சிகிச்சை மூலம் அந்த ஆணிகள் அகற்றப்பட்டன. வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்லும் மலையக பெண்களின் பலர் உயிரிழந்து சடலமாக நாடு திரும்பிய சம்பவங்களும் காணப்படுகின்றன. அவ்வாறு உயிரிழப்பவர்களின் சடலங்களை மீள பெறுவதற்கு கூட அவர்களின் உறவினர்கள் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வாறான பல சம்பவங்கள் மலையக பகுதிகளில் பதிவாகின்றன. எனவே, மலையகப் பெண்க ளின் உழைப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள அரசு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கையின்

தொடர்ச்சி: பக்கம் 13

# சாத்தான் குளம் போராடி பெறப்பட்ட நீதி




**ஆதி:** சட்டவாளர் – தமிழ் நாடு

சாத்தான் குளம் காவல் கொட்டடி படுகொலை வழக்கில் குற்றவாளிகள் அனைவருக்கும் இரட்டை மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது உள்ளார் மதுரை மாவட்ட நீதிபதி!



கொரானா ஊரடங்கு காலத்தில் இரவு 8 மணிக்கு மேல் தனது செல்போனை தடையை மீறி திறந்து இருந்தார் என்று கூறி ஜெயராஜ்யை சாத்தான் குளம் போலீசார் விசாரணைக்கு அழைத்து சென்று சட்டவிரோதமாக அடைத்து வைத்து இருந்தனர். தனது தந்தையை விடுவிக்க கோரி ஜெயராஜ் மகன் பெனிக்ஸ் காவல்துறையினரிடம் வாக்குவாதம் செய்தார் இதனால் ஆத்திரமடைந்த காவல்துறையினர் அப்பா, மகன் என இருவரையும் ஒருவர் கண் முன்னே மற்றொருவரை நிர்வாணப் படுத்தி அடித்து சித்திரவதை செய்து உள்ளது. இரவு 7:30 மணிக்கு தொடங்கிய காவல்துறையினரின் மிருகத்தனமான தாக்குதல் அதிகாலை 3.30 மணிவரை நீடித்தது.



இருவரின் பின்புறமும் லத்தியால் இருநூறு முறைக்கு மேல் அடித்ததில் முற்றிலும் சிதைந்து விட்டது. மேல்புறம் தோலே இல்லை மேலும் இருவரின் ஆசன வாயிலுக்குள் லத்தியை நுழைத்து தாக்கி உள்ளனர். இதை பிரேத பரிசோதனை அறிக்கை உறுதி செய்து உள்ளது.

குற்றவாளிகள் அனைவருக்கும் மரண தண்டனை வழங்கும் முன் இந்த வழக்கு அரிதினும் அரிதான வழக்கு என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெளிவாக கூறி உள்ளார். அதனால் தான் மரண தண்டனை விதிப்பதாகவும் கூறிய தோடு இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

மதுரை மாவட்ட கூடுதல் நீதிபதி முத்துக்குமரன் தனது தண்டனைத் தீர்ப்பில் அமெரிக்காவில் காவல் துறையால் படுகொலை செய்யப்பட்ட ஜார்ஜ் ஃப்ளாடை குறிப்பிட்டு உலகம் முழுவதும் காவல்துறையால் அப்பாவி கள் பாதிப்புக்கு உள்ளாவது தொடர்ந்து வருகிறது என்று கூறியதோடு இவ்வாறான மரணங்கள் நாகரிக சமுகத்திற்கு எதிரானது என குறிப்பிட்டார்.



மேலும் மடப்புரம் அஜித் குமார் காவல்கொட்டடி மரணத்தையும் சுட்டிக் காட்டி இனிமேல் இதுபோன்ற மரணங்கள் நிகழக் கூடாது என கூறியதோடு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டால் 14 வருடங்கள் கழித்து வெளியே வந்து விடும் அபாயத்தையும் சுட்டி க் காட்டி மரண தண்டனை யைத் தவிர வேறு தண்டனை வழங்க முடியாது என கூறினார்.




மேலும் மதுரை உயர்நீதிமன்றம் தலையீடு செய்யாமல் இருந்திருந்தால் பெனிக்ஸ் - ஜெயராஜ் இருவரின் உடல் தகனம் செய்யப்படுவதற்கு முன்பே இவ்வழக்கு புதைக்கப்பட்டு இருக்கும் என தனது தீர்ப்பில் கூறினார். உண்மையில் அன்றைய தமிழக அரசு சாத்தான்குளம் காவல்துறைக்கு ஆதரவாகவே செயல்பட்டது. உயர்நீதிமன்றம் தாமாகவே முன்வந்து இவ்வழக்கை எடுத்து விசாரணை செய்து. கோவில்பட்டி நீதித்துறை நடுவர் இவ்விடயத்தை விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டது.

விசாரணைக்கு சென்ற நீதிபதியையே சாத்தான் குளம் காவல்துறை அதிகாரிகள் மிரட்டினர் இதன் பிறகு உயர்நீதிமன்றம் வருவாய் கோட்டாட்சியர் சாத்தான் குளம் காவல்நிலையத்தை பொறுப்பு எடுக்க உத்தரவிட்டதோடு மத்திய தொழில் பாதுகாப்பு துறையை பாதுகாப்புக்கு என்று நியமித்தது. இதன் பிறகு தான் சாத்தான் குளம் காவல்துறை அதிகாரிகள் மீதான விசாரணை முழுமையாக நடந்தது. அதன் பின்னர் சிபிஜ வசம் இவ்வழக்கு ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறு பல கட்டங்களாக இவ்வழக்கு நடந்து வந்தது.



இரட்டை மரண தண்டனை வழங்கிய நீதிமன்றம் தனது தீர்ப்பில் இவ்வழக்கில் உடல் ரீதியான தண்டனை மட்டுமே போதுமானது அல்ல என்று கூறியோடு குற்ற வாளிகள் அனைவருக்கும் மிக அதிகமான அபராதம் விதிக் கப்பட வேண்டும் என்று கூறினார்.

அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நீதி பெற்று தர உணர்வுபூர்வமான பங்களிப்பை செய்ததோடு, சிறப்பு அரசு தரப்பு வழக்கறிஞரான ராஜீவ் ரூபஸ் வழக்கறிஞர் கட்டணம் ஏதுமின்றி இவ்வழக்கில் வாதாடினார். தனது இறுதிவாத்தில் இவ்வழக்கு அரிதினும் அரிதான வழக்கு என்று தனது வாதத்தை முன் வைத்தார்.

சிபிஜயையும் தனது பொறுப்பை உணர்ந்து சாத்தான் குளம் வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்து சாட்சிகளையும் ஆதாரங்களையும் சேகரித்து இரண்டு குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது.

வெறுமனே இந்த தீர்ப்பு வழங்கப்பட வில்லை அனைத்து தரப்பு மக்களின் போராட்டமும் ஒற்றுமையையும் புறக்கணித்து விட்டு இவ்வழக்கை அணுக முடியாது. மக்களிடம் விழிப்புணர்வு இல்லாமல் போயிருந்தால் அரசு கள் இவ்வழக்குக்கு முடிவுரை எழுதி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை!

சாத்தான் குளம் போராடி பெறப்பட்ட நீதி என்பது தான் இங்கு முக்கியம்! மக்களிடம் உள்ள விழிப்புணர்வு தான் குற்றவாளி கள் தண்டிக்கப்பட காரணமே அன்றி அரசின் கருனை அல்ல.

• • •


பாராளுமன்றக் கண்காட்சி
உண்மைகள் உறங்காது
தமிழ் இனப்படுகொலை 1948 – 2026
13 வைகாசி 2026 ; காலை 11:00 தொடக்கம் மாலை 4:00
Australian Parliment House, Canbera ACT 2600
Dining Room - 1
கண்காட்சி பற்றி
1948 முதல் இன்று வரை இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலையின் உண்மைகளை இந்தக் கண்காட்சி பதிவு செய்கிறது.
வரலாற்று காலவரிசைகள், ஆதாரங்கள் மற்றும் மக்களின் வாழ்வனுபவங்களின் மூலம், பல தசாப்தங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் அமைப்புசார்ந்த வன்முறை, கட்டாய இடம்பெயர்வு மற்றும் அநீதிகளை இது வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.
நிகழ்ச்சி நிரல்
• நாள் முழுவதும் கண்காட்சி திறந்திருக்கும்
• இடைவேளைகளில் பேச்சாளர்களின் உரையாடல்கள்
கலந்து கொள்வதன் அவசியம்
• தமிழ் இனப்படுகொலையின் வரலாற்றை அறிந்து கொள்
• சமூகத்தின் குரல்களை கேட்க
• மனித உரிமை ஆதரவாளர்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்களுடன் கலந்துரையாட
• நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக ஒன்றிணைய
தமிழ் ஏதிலிகள் கழகம்
Tamil Refugee Council
KALYANI INPAKUMAR
TRC NSW COORDINATOR
0425 306 933



# ஹங்கேரி ஆட்சிமாற்றம் ஒரு தொடர் நிகழ்வின் பகுதி

தமிழில்: ஆர்த்திகன்

இயற்பியலைப் போலவே அரசியலிலும், ஒவ்வொரு செயலுக்கும் சமமான மற்றும் எதிர் எதிர்வினை உண்டு. விக்டர் ஓர்பன், புலம்பெயர்ந்தோர், தாராளவாத விழுமியங்கள் மற்றும் பிரஸ்ஸல்ஸின் கட்டளைகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட ஒரு அரசான 'ஹங்கேரியக் கோட்டையை'க் கட்டியெழுப்ப 16 ஆண்டுகள் செலவிட்டார். இருப்பினும், வரலாற்றின் முரண்நகை என்னவென்றால், அந்த முற்றுகை வெளியிலிருந்து வரவில்லை.



அந்த 'கோட்டையின்' சாவிகளை, ஓர்பனுடன் பல ஆண்டுகளாக ஒரே மேசையில் அமர்ந்திருந்த ஒருவரே கையில் வைத்திருந்தார். ஹங்கேரி தனது தலைவருக்குத் துரோகம் செய்யவில்லை – விக்டர் ஓர்பன் என்ற பெயர் அந்நாட்டின் நவீன வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 1980-களின் பிற்பகுதியில் ஓர்பனின் தலைமுறையைப் போலவே, இளம் ஹங்கேரியர்களும் மாற்றத்தைக் கோருகின்றனர் – அந்த மாற்றம், முன்னாள் ஆளும் கட்சியின் மேட்டுக்குடியினரால் இனி எப்போதும் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படுவதில்லை. இந்த முக்கியத்துவம் எவ்வாறு மாறும், மாக்யாரின் 'தாராளவாதப் பழமைவாதம்' என்றால் என்ன, மற்றும் இனச் சிறுபான்மையினர் முன்வைக்கும் பிரச்சினைகளை யார் கையாள்வார்கள்?



சமீபத்திய தேர்தல்களில் டிஸ்ஸா கட்சியின் வெற்றியைப் பற்றி அரசியல் செல்வாக்கு மிக்க ஓர்பன் அமைதியாகவும் நம்பிக்கையுடனும் பேசும் காணொளியைப் பார்க்கும்போது, அவருடைய எதிராளியான பீட்டர் மாக்யாரின் மாபெரும் வெற்றி, அவருக்கு தனிப்பட்ட முறையில் அதிர்ச்சியாக இல்லாமல், அவருடைய பரிவாரங்களுக்கு மட்டுமே அதிர்ச்சியாக இருந்தது என்ற எண்ணம் ஏற்படுகிறது. 16 ஆண்டுகளுக்கும் மேலாக, ஃபிடெஸ் கட்சியின் மேட்டுக்குடியினர் தேர்தல் தண்டனையிலிருந்து தப்பிக்கும் நிலைக்குப் பழகிவிட்டனர்; தங்கள் தலைவரின் வசீகரம் எந்தவொரு அரசியல் விலையையும் விட அதிகமாக இருக்கும் என்று அவர்கள் நம்பினர்.

1990-களின் கடினமான மாற்றத்தைச் சகித்துக் கொண்ட ஃபிடெஸ் தலைமுறை, 25% பணவீக்கத்தை தவிர்க்க முடியாத ஆனால் தற்காலிகமான ஒரு தீமையாகக் கருதியது, அதைச் சகித்துக்கொண்டே ஆக வேண்டும் என்றும் நினைத்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் வளர்ந்த மற்றொரு ஹங்கேரி, அதன் கழுத்தில் மூச்சுவிடத் தொடங்கிய தருணத்தை இந்த மேட்டுக்குடியினர்தான் தவறவிட்டனர்.



இளம் ஹங்கேரியர்களுக்கு, சமீபத்திய ஆண்டுகளில் நிலவிய 'ஸ்திரத்தன்மை' என்பது தேக்கநிலைக்கு ஒத்ததாகிவிட்டது. புடாபெஸ்டிலிருந்து ஒரு மணி நேரத்தில் சென்றடையக்கூடிய ஆஸ்திரியாவுடன் ஒப்பிடுகையில், பணவீக்கமும் மளிகைப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட 50% உயர்வும், மீள்திறனுக்கான அறிகுறியாகக் கருதப்படாமல், திறமையற்ற நிர்வாகத்தின் அறிகுறியாகவே பார்க்கப்பட்டன. இதுவே ஏப்ரல் 12 தேர்தல்களில் எதிர்க் கட்சியின் படுதோல்விக்கு வழிவகுத்தது. டிஸ்ஸா கட்சி நாடாளுமன்றத்தில் 138 இடங்களை வென்றதுடன், அத்தகைய பெரும்பான்மையுடன், ஹங்கேரியின் அரசியலமைப்பைத் தன் விருப்பப்படி திருத்த முடியும்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் நல்லுறவை ஏற்படுத்துதல், ஹங்கேரியைச் சீர்திருத்துதல், சுதந்திரமான நீதிமன்றங்களை வலுப்படுத்துதல், மற்றும் சுகாதாரம் மற்றும் கல்வியை மேம்படுத்துதல் ஆகியவையே மாக்யாரின் செயல்திட்டத்தின் மையத்தில் துல்லியமாக உள்ளன.

இதற்கான விலை, ஐரோப்பிய ஒன்றிய நிதியிலிருந்து €19 பில்லியனுக்கும் அதிகமான தொகையைத் திரும்பப் பெறுவதாகும். ஹங்கேரியின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 10%க்கு சமமான இந்தப் பணத்திற்கு ஈடாக என்ன எதிர் கோரிக்கைகள் முன்வைக்கப்படும்?

மேற்கத்திய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை ஓர்பன் விமர்சித்ததில், குடியேற்றம் ஒரு முக்கியப் பிரச்சினையாக இருந்தது. 2024-ல் அங்கீகரிக்கப்பட்டு, ஜூன் 2026-ல் நடைமுறைக்கு வரவுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் குடியேற்ற ஒப்பந்தத்தை ஹங்கேரி எதிர்த்தது.

அதே நேரத்தில், 2024-ல் சுமார் 400,000 வசிப்பிட அனுமதிகள் வழங்கப்பட்டன, முக்கியமாக தொழிற்சாலை வேலைகளுக்காக தொழிலாளர்களுக்கு. ஹங்கேரிய இனத்தவர் குறைந்த ஊதியத்திற்கு வேலை செய்ய விரும்பாமல், மற்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உள்ள சிறந்த வாய்ப்புகளுக்காக நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். ஐரோப்பியப் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பின் (OSCE) கூற்றுப்படி, 2023-ஆம் ஆண்டில் பணவீக்கம் உச்சத்தை அடைந்தபோது சுமார் 50,000 பேர் நாட்டை விட்டு வெளியேறினர். இதற்கிடையில், ஹங்கேரி தனது தொழில்துறைத் திறனைப் பராமரிக்க வேண்டும். பல ஆண்டுகளாக, இந்தத் தேவை தென்கிழக்கு ஆசியாவிலிருந்து வரும் புலம்பெயர்ந்தோரால் – இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் – பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.



பிரச்சாரத்தின் போது, மாக்யார் இந்த முரண்பாட்டைத் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டார். அவரது வாதம் எளிமையானது: "ஃபிடெஸ் அரசாங்கம் தேசத்திற்குத் துரோகம் செய்கிறது – ஹங்கேரிய ஊதியங்களைக் குறைக்கவும் சீன நிறுவனங்களைத் திருப்திப்படுத்தவும் மலிவான தொழிலாளர்களை இறக்குமதி செய்கிறது."

அடுத்து என்ன நடக்கும்? செர்பிய எல்லையில் உள்ள வேலி அப்படியே இருக்கும்: மாக்யார் பொறுப்பற்றவர் அல்ல, மேலும் ஹங்கேரிய சமூகம் திறந்த எல்லைகளை ஏற்றுக்கொள்ளாது. இருப்பினும், "பிரஸ்ஸல்ஸை நிறுத்து" என்ற விளம்பரப் பலகைகளும், அரசு தொலைக்காட்சியில் அதற்கேற்ற செய்திகளும் மறைந்துவிடும். குடியேற்றக் கொள்கை அதிகாரத்துவமாக மாறும். விருந்தினர் தொழிலாளர்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருப்பார்கள்.

தொடர்ச்சி: பக்கம் 12

## ஹங்கேரி ஆட்சிமாற்றம் ... தொடர்ச்சி...

சமீபத்திய ஆண்டுகளில், ஹங்கேரிய-சீன உறவுகள் உச்சத்தில் இருந்து வருகின்றன. உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில், 2010-ல் ஓர்பன் 'கிழக்கு நோக்கிய திறப்பு' என்ற உத்தியின் மூலம் இந்தப் பாதையை அமைத்தார். பெல்கிரேட்-புடாபெஸ்ட் ரயில் பாதையை நவீனமயமாக்குதல், டெப்ரெசெனில் மின்சார வாகனங்களுக்கான பேட்டரி தொழிற்சாலைகளை சீனப் பெருநிறுவனங்களான CATL (கான்டெம்பரரி ஆம்பெரெக்ஸ் டெக்னாலஜி) மற்றும் ஈவ் பவர் (சுமார் €9 பில்லியன் முதலீடு) ஆகியவை அமைப்பது, அத்துடன் சுமார் €5 மில்லியன் மதிப்புள்ள முதலீட்டில் BYD நிறுவனத்தின் முழுமையான மின்சார கார் ஆலை அமைப்பது ஆகியவை முக்கியத் திட்டங்களில் அடங்கும்.

இருப்பினும், 2020-களிலிருந்து, ஐரோப்பிய ஒன்றியத்தால் சீனா ஒரு "முறையான போட்டியாளர்" என்று முத்திரை குத்தப்பட்டுள்ளது, மேலும் ஐரோப்பிய நிறுவனங்கள் சீனத் திட்டங்களின் வேகத்தைக் குறைத்துள்ளன. பெல்கிரேட்-புடாபெஸ்ட் ரயில் பாதை, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒப்பந்த விதிகளால் குறிப்பாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்யாரின் அரசாங்கத்துடன், புடாபெஸ்ட்-பெய்ஜிங் உறவுகள் இனி ஒரு மேல்நோக்கிய பாதையில் இருக்காது. பேரணிகளின் போது "பேட்டரி காலனிகளை" விமர்சித்தபோதிலும், மாக்யார் தொழிற்சாலைகளை மூடமாட்டார். இருப்பினும், ஐரோப்பிய ஒன்றியத்தில் சீனா தனது 'அரசியல் பாதுகாப்பை' இழக்கும் – ஹங்கேரி சீனாவுக்கு எதிரான முயற்சிகளைத் தடுப்பதை நிறுத்தும், மேலும் முன்னுரிமைச் சலுகைகள் முடிவுக்கு வரும். ரயில்வே திட்டத்தின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவும், ஊழல் எதிர்ப்புத் தணிக்கைகளுக்கு உட்பட்டதாகவும் இருக்கும்.

ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கையை கணிசமாகப் பாதிக்கும் நகர்வுகளுக்கு ஹங்கேரிக்கு வரையறுக்கப்பட்ட இடமே உள்ளது – உக்ரைனின் இராணுவத்திற்கான €90 பில்லியன் கடன், அணுசக்தி மற்றும் எரிசக்தி ஒப்பந்தங்கள் மீதான வீட்டோவை நீக்குவது மற்றும் புதிய தடைகளை ஆதரிப்பது போன்றவை இதில் அடங்கும்.

ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தடைகளுக்கான முந்தைய ஐரோப்பிய ஒன்றிய வாக்கெடுப்புகளில் ஆர்பன் பங்கேற்றார், எனவே ஹங்கேரி தொடர்ந்து அவற்றை ஆதரித்தால் கிரெம்ளினுக்கு ஆச்சரியமாக இருக்காது. உக்ரைன் கடன் என்பது புவிசார் அரசியல் சார்ந்தது மற்றும் பெரும்பாலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உண்மையான நிதித் திறனைச் சார்ந்துள்ளது – எனவே ஹங்கேரியின் ஒப்புதல் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து உக்ரைனுக்குப் பணம் தானாகவே வழங்கப்படும் என்று அர்த்தமல்ல.

மாக்யாரின் குழு பெற்ற முக்கிய சொத்து, காஸ்ப்ரோம் மற்றும் ரோசாட்டம் உடனான மூலோபாய ஒப்பந்தங்களின் தொகுப்பாகும். ஓர்பன், உடனடித் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யாமல், ஒரு நீண்டகால எரிசக்திப் பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்கினார். இந்த அமைப்பை ஒரே தேர்தல் காலத்திற்குள் அகற்றுவது மிகவும் செலவு மிக்கதாகவும் கடினமானதாகவும் இருக்கும்.

ஒரு முக்கியத் திட்டம் பாக்ஸ் II ஆலை ஆகும். இது, மொத்த மின்சார உற்பத்தியில் 70% அணுசக்தியால் பூர்த்தி செய்ய வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் செலவு €12.5 பில்லியன் ஆகும் (€10 பில்லியன் ரஷ்யக் கடனுதவியால் நிதியளிக்கப்படுகிறது). கட்டுமானத்தை நிறுத்துவது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியம் என்றாலும், அது அபராதங்களுக்கு வழிவகுக்கும். பெரும்பாலும், இந்தத் திட்டம் ஒரு மெதுவான "தணிக்கை" கட்டத்திற்குள் நுழையும், ஆனால் கட்டுமானம் முழுமையாக நிறுத்தப்படாது.

குரோஷியாவின் ஜனாஃப் குழாய்வழித் திட்டம் போன்ற மாற்று வழிகள், அந்த அரசாங்கத்தின் போக்குவரத்து வரிகள் காரணமாக ஐந்து மடங்கு அதிக செலவாகும். எனவே, மாக்யார் அரசாங்கத்திற்கு விலையுயர்ந்த கடல்வழி எண்ணெய் அல்லது 'நச்சுத்தன்மை வாய்ந்த' ரஷ்ய விநியோகங்கள் என மலிவான வழிகள் எதுவும் இருக்காது.

புடாபெஸ்டுக்கும் வாஷிங்டனுக்கும் இடையிலான உறவுகள் ஒரு சிக்கலான கட்டத்தை நோக்கிச் செல்கின்றன. ஓர்பன் CPAC மாநாட்டை நடத்தினார், டக்கர் கார்ல்சனுடன் நட்பு பாராட்டினார், மேலும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை "உலகின் நம்பிக்கை" என்று அழைத்தார். வெள்ளை மாளிகையும் இதற்குப் பதிலளித்தது: வாக்கெடுப்புக்கு முன்பு துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ் தனிப்பட்ட முறையில் ஓர்பனை ஆதரித்தார். மாக்யாரின் வெற்றி, டிரம்பின் பந்தயத்தின் தோல்வியைக் குறிக்கிறது. அமெரிக்க அதிபர் ஒரு கடினமான நிலையில் இருக்கிறார்; அவர் "ஞானத்திற்காக" பாராட்டியவர்களே, அவர் தேர்ந்தெடுத்த வேட்பாளருக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

டிரம்பைப் பொறுத்தவரை, மாக்யார் ஒரு 'ஐரோப்பிய அதிகாரத்துவவாதி', எனவே அமெரிக்காவுடன் நட்பைப் பேணுவதற்குப் பதிலாக, மாக்யார் நேட்டோ மீது பந்தயம் கட்டுவார். 2035-க்குள் பாதுகாப்புச் செலவினங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% ஆக உயர்த்துவேன் என்ற அவரது தேர்தல் வாக்குறுதி இதைப் பிரதிபலிக்கிறது. உறவுகள் நடைமுறைக்கு உகந்ததாகவே இருக்கும், ஆனால் முந்தைய சித்தாந்த நெருக்கம் இல்லாமல் இருக்கும் – இது டிரம்ப் புரிந்துகொள்ளும் ஒரு மொழி.

ஓர்பனின் ஹங்கேரி தனது சொந்தக் கருத்தியலைப் பின்பற்றி, ரஷ்யா மற்றும் சீனாவுடன் உறவுகளை வளர்த்துக் கொண்டது. மாக்யார்களின் எழுச்சி, மென்சக்தி புவிசார் அரசியலில் ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது: அதாவது, 'கோட்டையின் சாவிகளை' போப்பாண்டவரிடம் திரும்ப ஒப்படைப்பதாகும்.

முடிவாக, ஹங்கேரி ஒரு பெரும் மாற்றத்தின் வாசலில் நிற்கிறது. அதன் புவியியல், அரசியல் இயக்கவியல் மற்றும் வெளியுறவுக் கொள்கை நோக்கு ஆகியவை ஐரோப்பிய செயல்முறைகளைப் புரிந்துகொள்வதற்கு இன்றியமையாதவையாக இருக்கின்றன. பரந்த பழமைவாத-வலதுசாரி கட்டமைப்பிற்குள்ளேயே கூட, மாறிவரும் முன்னுரிமைகள் புதிய சக்திகளை முன்னிறுத்துவதோடு, முன்னர் அசைக்க முடியாததாகத் தோன்றிய அதிகாரத்தைக் கொண்டவர்களையும் பலவீனப்படுத்துகின்றன. உலகளாவிய மாற்றத்தின் பரந்த சூழலில், இத்தகைய நிகழ்வுகள் தற்செயலானவை அல்ல, மாறாக ஒரு தொடர் நிகழ்வின் பகுதியாகவே பார்க்கப்பட வேண்டும்.

**நன்றி: ரஸ்ய ரூடே**

## நிலக்கரி கொள்வனவில் ... தொடர்ச்சி...

கடமையாகும். குறிப்பாக, இந்தோனேஷியாவின் ஆய்வகம் ஒன்றின் உரிமம் 2025 டிசம்பர் 31 உடன் இரத்து செய்யப்பட்டிருந்தும், அந்த அறிக்கைகளை இலங்கை நிலக்கரி நிறுவனம் ஏற்றுக் கொண்டமை பாரிய விதி மீறலாகும்.

அமைச்சர் ஜயக்கொடியின் பதவி விலகல் என்பது சட்ட ரீதியான தீர்வு என்பதை விட, அரசியல் ரீதியான 'தற்காப்பு' நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்ததன் மூலம் அரசாங்கம் அமைச்சரைக் காப்பாற்றினாலும், மக்கள் மத்தியில் தனது நற்பெயரைஇழந்துவிட்டது.

குறிப்பாக நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கம் தோற்கடித்து மார்பு தட்டினாலும், மக்கள் மத்தியில் காணப்பட்ட வெகுவான அதிருப்திகள், ஜே.வி.பி தலைமையகத்தின் அழுத்தங்கள் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் நேரடிச் சான்றுகள் காரணமாகவே ஜயக்கொடியின் பதவி விலகல் நிகழ்ந்துள்ளது.

ஆரம்பத்திலேயே அரசாங்கம் அவரைப் பதவியிலிருந்து ஒதுங்கியிருக்கப் பணித்திருந்தால், ஒட்டுமொத்த அரசாங்கமும் 'ஊழலைப் பாதுகாக்கும் தரப்பு' என்ற விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்காது. ஆனால் அரசாங்கம் அவ்வாறு செய்திருக்கவில்லை.

மேலும், இந்த நிலக்கரி ஊழல் விவகாரம் இலங்கையின் வலுசக்தி பாதுகாப்பில் உள்ள ஓட்டைகளை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது. நுரைச்சோலை மின்நிலையத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டுமானால், தகுதியற்ற இடைத்தரகர்களைத் தவிர்த்து, நேரடி மற்றும் வெளிப்படையான கொள்வனவு முறையைப் பின்பற்ற வேண்டும் என்பது தற்போது முக்கிய விடயமாகின்றது.

கணக்காய்வாளர் நாயகம் தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளவாறு, அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச ஆய்வகங்களின் நேரடி மேற்பார்வை மற்றும் காலநிலைக்கு ஏற்ற கொள்வனவுத் திட்டமிடல் அவசியமாகும். இல்லையேல், இத்தகைய நிர்வாகத் தவறுகளும், அதனால் ஏற்படும் பில்லியன் கணக்கான ரூபா இழப்புகளும் மீண்டும் மீண்டும் நிகழாதிருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதங்களும் இல்லை.

அமைச்சரின் பதவி விலகல் என்பது தரமற்ற நிலக்கரி கொள்வனவின் தொடக்கமே தவிர, அது முடிவான தீர்வல்ல. முறையான நீதி விசாரணை மற்றும் இழப்பீடுகளை அறவிடுதல் மூலமே அரசாங்கம் இழந்த மக்கள் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

ஆனால் ஆளும் தரப்பு பதவி விலகிய அமைச்சர் ஜயக்கொடி ஊழல் செய்யவில்லை, மோசடிகளில் ஈடுபடவில்லை என்றே மீண்டும் மீண்டும் வாதிட்டுக் கொண்டிருக்கின்றது. ஆதாரங்களை வெளிப்படுத்துமாறும் சவால் விடுத்துக்கொண்டிருக்கின்றது.

அதுமட்டுமன்றி, 2009 ஆம் ஆண்டு முதல் 2026 மார்ச் வரையான காலப்பகுதியில் நுரைச்சோலை அனல் மின்நிலையத்துக்கு 465 கப்பல்கள் ஊடாக நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அந்த இறக்குமதிகளின் போது பல்வேறுபட்ட வழிகளில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக முன்னாள் வலுசக்தி அமைச்சர்களான பவித்ராதேவி வன்னியராச்சி, ரஞ்சித் சியம்பலாபிடிய ஆகியோர் பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார்கள்.

ஆனால் அந்த முறைகேடுகள் குறித்து எவ்வித நடவடிக்கைகளையும் அந்த அரசாங்கங்கள் மேற்கொள்ளவில்லை. ஆகவே உயர் நீதிமன்ற நீதியரசர் கியான் குலத்துங்க தலைமையில் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஆதித்திய படவேந்திகே, மேல் நீதிமன்ற நீதியரசர் சஞ்சீவ சோமரத்னா ஆகியோரை உள்ளடக்கிய மூவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அவற்றிலும் கவனம் செலுத்தும் என்றும் கூறிக்கொண்டிருக்கின்றது.

அநுர அரசாங்கத்தின் இவ்விதமான பிரதிபலிப்புக்கள் அனைத்துமே நல்லாட்சிக்கான குணாம்சங்கள் அல்ல. மாறாக அரசியலில் தப்பிப்பிழைப்பதற்கான தற்காலிக காரணங்களே. இக்காரணங்கள் தரமற்ற நிலக்கரி கொள்வனவால் ஏற்பட்ட ஊழல், மோசடி கருமையை ஒருபோதும் போக்கப்போவதில்லை.

• • •

## இந்திய மீனவர்களின் ... தொடர்ச்சி...

படவில்லை.

2010ஆம் ஆண்டு, இரண்டு தரப்புகளும் அடைந்த உடன்படிக்கை முக்கியமானது. அதில், வருடத்தில் 70 நாள்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பதென்றும் ஓராண்டுக்குள் இலங்கைக் கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் பாவனையை முற்றாக நிறுத்த வேண்டும் என்றும் கண்ட உடன்பாடு, இலங்கை, இந்திய அரசுகளின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. இந்திய அரசு அதை ஏற்க மறுத்துவிட்டது.

இந்தப் பிரச்சினை வெறுமனே பொருளாதாரப் பிரச்சினையோ அல்லது வாழ்வாதாரப் பிரச்சினையோ மட்டுமல்ல. இது மிகப்பெரிய கடல் வள, சூழலியல் பிரச்சினை.

இலங்கை, இந்திய மீனவர்களிடையே, பாக்கு நீரிணை கடற்பரப்பில் மீன்பிடி தொடர்பாக, நீண்டகாலமாக இருந்துவந்த மோதலை, இலங்கையில் மூன்று தசாப்தகால யுத்தத்தின் முடிவு, புதிய பரிமாணத்துக்கு இட்டுச் சென்றுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில், இந்திய இழுவைப் படகுகள் பல சூழலியல் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன. மீன்களின் பெருக்கமும் வளர்ச்சியும் ஆழ்கடலுக்கும் பரவைக் கடலுக்கும் இடைப்பட்ட கடலடித்தளமேடைப் பகுதி யிலேயே நடக்கின்றன. இலங்கையின் கடலடித்தள மேடையின் பெரும்பகுதி, மன்னாருக்கும் முல்லைத் ~~தீவுக்கும் இடைப்பட்ட 480 கிலோமீற்றர் நீளமும் 22 முதல்~~ 60 கிலோமீற்றர்அகலமும் கொண்ட பிரதேசமாகும். இப் பகுதியில், இழுவைப் படகு மீன்பிடி மிகக் கேடானது.

இழுவைப் படகுமீன்பிடி என்பது, கடலின் அடிவரை உள்ள அனைத்தையும் வாரிஅள்ளி எடுப்பதாகும். இதை, அடியோடு அள்ளுதல் (Bottom trawling) என்று அழைப்பர். இம் மீன்பிடி முறையில், ஆறு முக்கிய அடிப்படைப் பிரச்சினைகள் உள்ளன.

1. வலையை வீசி, கடலின் அடி வரையுள்ள அனைத்தையும் அள்ளுவதால், மீன்களின் வகை, வளர்ச்சி போன்ற எவையும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

2. கடலின் அடியோடு அள்ளும்போது, மீன்களுக்கான உணவாகவும் கடலடி உயிரியல் சமநிலையைப் பேண முக்கியமாகவும் உள்ள கடலடித் தாவரங்கள் அழிகின்றன. அவற்றின் அழிவு, கடலடி உயிரியல் சமநிலையைப் பாதிக்கிறது.

3. கடலின் அடியோடு அள்ளும் போது, மீன்களும் தாவரங்களும் மட்டுமன்றிப்பிற கடல்வாழ் உயிரினங்களும் சிக்குகின்றன. அவை மனிதப் பாவனைக்கு உதவாத, கடலடித்தள உயிரியல் நிலைப்புக்கு வேண்டிய நுண்ணுயிரிகளும் உயிரினங்களுமாகும். அவை பயனின்றி அழிகின்றன.

4. இழுவைப் படகு மீன்பிடியால் கடலடி பவளப்பாறைகளும் முருகைக் கற்களும் அழிகின்றன. முருகைக் கற்களின் அளவுக்கு மீறிய அழிவு, வடபகுதியில் மண்ணரிப்பு அதிகரிக்கவும் கடல் நீர் குடாநாட்டுக்குள் புகவும் வழிவகுக்கும்.

5. கடலின் அடியோடு அள்ளும் போது, மீன்களின் முட்டைகளும் குஞ்சுகளும் சிக்குகின்றன. இது, மீன்களின் இனப்பெருக்கத்தையும் விருத்தியையும் தடுக்கிறது. இச்செயற்பாடு, நீண்டகாலத்தில் அப்பகுதியை மீன்களற்ற பிரதேசமாக்கும்.

6. தேவையற்று வாரியள்ளப்படும் கடல் தாவரங்களும் இறந்த உயிரினங்களும் மீண்டும் கடலில் கொட்டப்படுகின்றன. இவையும் பாரிய சூழலியல் பாதிப்புக்குக் காரணமாகின்றன.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், மீன் என்பது இயற்கை வளமாகும். அது இல்லாமல்போகக் கூடியது. கடலையும் இயற்கையையும் பாதுகாப்பதன் மூலமே, மீனை என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் வளமாகப் பேணலாம். மீன்வளத்தின் உருவாக்கம், கடலின் ஆழம், கடலடித் தாவரவியல், கடலின் புவிசார் அமைப்பு, கடல் நீரோட்டம்,கடலின் வெப்ப தட்ப நிலை போன்ற பல காரணிகளில் தங்கியுள்ளது.

**தொடரும்.....**

## தியாகி திலீபனின் ... தொடர்ச்சி...

அன்னையர் முன்னணியினரைப் பேச்சு வார்த்தைக்கு அமைதிப்படை அழைத்தது. இந்தியப்படை பிரிகேடியர் சந்தோஷ் அவர்களும் அன்னையர் முன்னணி சார்பாக அதன் தலைவர் சுமத்திராதேவி, ஏற்பாட்டு குழு ஆலோசகர் கிங்ஸ்லி இராசநாயகம் இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தலைவர் வணசிங்கா, கத்தோலிக்க மதகுரு அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ, ஆகியோர் கலந்துகொண்டனர் இந்தியபடை தளபதி சந்தோஷ் “விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் அதன்பின்னரே பேச்சுவார்த்தை’ என்ற நிபந்தனையை விதித்தார்.




அன்னையர் முன்னணியின் நியாய மான கோரிக்கைக்கு செவி சாய்க்காமல் உண்ணா விரத்த்தை எப்படி நிறுத்தலாம், குழப்பலாம் என்ப தையே இந்தியபடை சிந்தித்தது.

அன்னையர் முன்னணி சார்பாக கலந்து கொண்டவர்கள் முதலில் போர் நிறுத்தத்துக்கு சம்மதியுங் கள் பின்னர் பேச்சுவார்தையில் அடுத்த வற்றை பரிசீலிக்கலாம் என்றனர், விடாப்பிடியாகவே இந்திய தளபதி சந்தோஷின் கோர முகம் தென்பட்டது அதனால் பேச்சு இணக்கப்பாடு இன்றி உண்ணாவிரதம் தொடர்ந்தது.

அதன்பின்னர் அப்போது 1988, ல் இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்த ஜே.என்.தீட்சித்தும் “புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்’ என்று மீண்டும் வலியுறுத்தினர். பேச்சுவார்த்தை வெற்றிபெறவில்லை.

அடுத்து சில தினங்களில் மாமாங்கம் கோயிலை சூழ உள்ள பகுதியை இந்திய ராணுவம் சுற்றிவளைத்தது. ராணுவ முகாம் ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டது. 1988, மார்ச், 21,22,23 நாட்களில் மட்டக்களப்பு மாநகரப்பகுதி எங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இருப்பினும், உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட அன்னைபூபதியின் சுற்றுவட்டத்தில் அவருக்கு ஆதரவாக கூடிய அன்னையர் முன்னணி தலைவர் உறுப்பினர்கள் தாய்மார்கள் பயப்படவில்லை. எழுந்தும் செல்லவில்லை. மேலும் மேலும் கூடினர்.

இந்திய இராணுவத்தின் கோரமுகம் மேலும் தொடர்ந்தது உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை.

தியாகச்சுடர் அன்னை பூபதி உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக 31, தினங்களில் 1988, ஏப்ரல்,19,செவ்வாய்க்கிழமை அன்று காலை 08. 45, மணிக்கு அவர் உயிர் நீத்தார்.

எந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக அன்னை பூபதி அவர்கள் போராடினாரோ அந்த இந்திய இராணுவம் பாரிய இழப்புக்களுடனும் அளவிடற்கரிய அவமானத்துடனும் தமிழீழத்தை விட்டு 1990,மார்ச்,24, ல் அன்று வெளியேறிச் சென்றது.

அன்னை பூபதியின் நினைவுநாள் ஈழத்தில் நாட்டுப்பற்றாளர் நாளாக என்றும் நினைவு கூரப்படுகிறது. இந்திய இராணுவம் 1987,யூன்.02, ல் யாழ்ப்பாணம் வடமராச்சி தொடக்கம் 1990, யூன்,14, கிழக்குமாகாணத்தில் மூதூர் பீரங்கி தாக்குதல் வரை அவர்கள் ஈழத்தில் நிலைகொண்டு இருந்த மூன்று வருடத்தில் 369, இடங்களில் தமிழர்களை படுகொலை செய்துள்ளர் இதற்கு பெயர்தானா “இந்திய அமைதிப்படை” என்பதை புரிவது நல்லது.

தியாகி திலிபனின் தியாகத்தை அவர் விடுதலைப்புலிகள் போராளி என காட்டி தப்பிக்க நினைத்த இந்திய அரசு, ஒரு குடும்பத்தலைவியின் தியாகத்தையும் உதாசீனம் செய்தது இந்தியாவின் போலி காந்தீயக்கொள்கை என்பதை அன்னைபூபதி அனைத்துலகிற்கும் நிருபித்தார் என்பதே சரித்திரத்தில் இடம்பிடித்தது.

• • •

## நெடுந்தீவு மக்களின் ... தொடர்ச்சி...

பழுதடைந்து வருவதோடு, பல கோடி ரூபாய் செலவில் செய்யப்படும் திருத்த வேலைகள் எவ்வித நிரந்தரத் தீர்வையும் தரவில்லை.

இதனால் அரச ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நாளாந்தம் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

தனியார் படகுகளும் போதிய அளவில் இல்லாத நிலையில், அதிகார சபையின் பாராமுகம் மக்களைக் கவலையடையச் செய்துள்ளது. கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளிலும் பாரிய பின்னடைவுகள் காணப்படுகின்றன.

உயர்தரப் பாடசாலைகளில் கலைப்பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாடங்களுக்குப் போதிய ஆசிரியர்கள் இல்லாத நிலை நீடிக்கின்றது. சுகாதாரத்துறையைப் பொறுத்தவரை, நெடுந்தீவு வைத்தியசாலையில் நிரந்தர மருந்துக் கலவையாளர் மற்றும் போதிய மருத்துவ மாதுக்கள் இல்லை.

இதனால் விடுமுறை நாட்களிலும் மாலை நேரங்களிலும் வைத்தியசாலைச் சேவைகள் முழுமையாக முடங்குகின்றன. அத்துடன் பற்சிகிச்சை உள்ளிட்ட பல அத்தியாவசிய சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி மற்றும் ஏனைய அரச திணைக்களங்களின் இழுத்தடிப்புச் செயற்பாடுகளும் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக நெடுந்தீவு மேற்கு பிரதான வீதியின் ஒரு பகுதி இன்னும் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக உள்ளதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தொடர்ச்சியான புறக்கணிப்புகளைக் கண்டித்து, ஒட்டுமொத்த நெடுந்தீவு மக்களையும் பொது அமைப்புகளையும் ஒன்றிணைத்து எதிர்வரும் 24ஆம் திகதி ஜனநாயக ரீதியில் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## அன்னை பூபதி ... தொடர்ச்சி...

### கருப்பையில் புகையும் தீ

இந்திய நாட்டின் அகிம்சை முகத்தை திலீபன் என்ற போராளி கிழித்தெறிந்த நிலையில் அன்னை பூபதியின் அறப்போராட்டம் ஊடாக ஈழப் பொதுமக்களாலும் இந்திய அரசின் அகிம்சை முகம் கிழிக்கப்பட்டது. அன்னைபூபதி ஈழத் தமிழ் மக்களின் அறப்போராட்டத்தின் முகம். இந்திய படைகளின் அராஜகங்களுக்கு எதிரான அற வழி ஆயுதம். ஜனநாயக வழிப் போராட்டத்தின் அடையாளம். இன்றைக்கு ஈழத்தில் தாய்மார்கள் தெருத் தெருவாக வீழ்ந்து புரண்டு போராட்டத்தில் ஈடுபடும்போது அன்னை பூபதியே நினைவுக்கு வருகிறார். இன்றைக்கு எங்கள் தெருவெல்லாம் அன்னை பூபதிகள் உள்ளனர். அன்னை பூபதி இந்திய அரசின் போரை நிறுத்த வேண்டும் என்பதற்காகவே உண்ணா விரதம் இருந்து உயிர் துறந்தவர். போரை நிறுத்தி, தம் தாயகத்து பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கமே அவரிடமிருந்தது. அதைப்போலவே இன்றும் எங்கள் தெருவெங்கும் அன்னையர்கள் போராடுவதும் பிள்ளைகளுக்காகவே. காணாமல் ஆக்கப்பட்ட தம் பிள்ளைகளை விடுவிக்க வேண்டும் அவர்களின் உண்மை நிலை என்ன என்று அறிவிக்க வேண்டும் என்று போராடுகின்றனர்.

எங்கள் அன்னையர்கள் - அன்னை பூபதிகள் நடத்தும் போராட்டங்கள் இலங்கை அரசின் கொடிய இன ஒடுக்குமுறை முகத்தை அம்பலம் செய்கிறது. தம்மை உருக்கி, தம்மை அழித்து மேற்கொள்ளும் இந்தப் போராட்டத்திற்கும் அன்னை பூபதியின் போராட்டத்திற்கும் மிக நெருக்கம் உண்டு. தாய் பூமியாகவும் தெய்வமாகவும் கருதப்படுபவள். அவளின் சினத்திற்கும் சீற்றத்திற்கும் கண்ணீருக்கும் வலிமையுண்டு. ஈழத்தின் அன்னையர்கள் தம் வயிற்றில் தீயை நிரப்பிப் போராடுகிற வரையில் இத் தீவு நெருக்கடிகளால் தளம்பிக்கொண்டே இருக்கும்.

• • •

## அன்னை பூபதி ... தொடர்ச்சி...

கனவே தனது தொழில்நுட்ப ரீதியான விளக்கங்களை வழங்கியுள்ளதுடன், செயற்குழு தனது இறுதிப் பரிந்துரைகளை அடுத்த மூன்று மாத காலத்திற்குள் வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தல்களைப் பழைய முறையில் நடத்துவதா? அல்லது புதிய கலப்பு முறையில் நடத்துவதா? என்பது குறித்த இறுதித் தீர்மானத்தை பாராளுமன்றம் விரைவாக எடுக்க வேண்டும் என ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறு ஒரு தெளிவான சட்ட ரீதியான இணக்கப்பாடு பாராளுமன்றத்தில் எட்டப்படும் பட்சத்தில், தொழில் நுட்ப ரீதியான முன்னேற்பாடுகளைச் செய்து இந்த 2026ஆம் ஆண்டு இறுதிக்குள் தேர்தலை நடத்தி முடிக்கத் தயாராக இருப்பதாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க உறுதியளித்துள்ளார்.






## இராணுவத்தின் ... தொடர்ச்சி...

கேப்பாப்புலவு பூர்வீகக் கிராமத்தில் மீள்குடியமர்த்தப்படாமல் அயற்கிராமத்தில் குடியேற்றஞ்செய்வதற்கு அப்போது மிகக்கடுமையான எதிர்ப்புக் களை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலைமில் இது ஒரு தற்காலிக ஏற்பாடு எனவும், இராணுவம் மக்களின் காணிகளில் இருந்து வெளியேறிய பிற்பாடு, மக்கள் அவர்களது சொந்தக்காணிகளில் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பவற்றினால் மக்களுக்கு உறுதிமொழி வழங்கப்பட்ட விடயம் தொடர்பிலும் இதன்போது தெளிவுபடுத்தினேன்.

அவ்வாறு தெரிவிக்கப்பட்டபோதும் கேப்பாப்புல வில் பகுதியளவான காணிகளே விடுவிக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டனர். அந்தவகையில் இன்னும் 55பேருக்குரிய 59.9ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளது. குறித்த விடயத்தை முல்லைத்தீவு மாவட்டசெயலாளரும் உறுதிப் படுத்தியுள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

அத்தோடு கேப்பாப்புலவில் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பான விவரங்கள் மற்றும் ஏற்கனவே அனுப்பப்பட்ட கடிதங்களின் பிரதிகள் என்ப வற்றை ஜனதிபதியிடம் இதன்போது நேரடியாகக் கையளித்து மிருந்தேன்.

அத்தோடு மக்களுடைய இந்தகாணிகள் விடு விக்கப்படவேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத் தியிருந்தேன்.

குறிப்பாக இராணுவத்தினர் வெளியேறிய பிற் பாடு சொந்தக்காணிகளில் குடியேற்றப்படுவீர்கள் என்ற உத்தர வாதத்துடன் ஒருகுடும்பத்திற்கு 0.25ஏக்கர் காணிவீதம் 44குடும்பங்களுக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு 11பேருக்கு மாற்றுக்காணிகள் எவையும் வழங் கப்படவில்லை. எனினும் இராணுவம் அபகரித்து வைத்துள்ள பகுதியில் மக்கள் ஒவ்வொருவருக்கும் 01 ஏக்கருக்கும் மேலான பூர்வீக காணிகள் இருப்பதையும் இதன்போது சுட்டிக் காட்டினேன்.

அத்தோடு மக்களின் பூர்வீகக் காணிகள் நந்திக்கடல் களப்பின் அருகோடு இருப்பதனால், அவர் களுக்கு நந்தித்கடல் களப்பு பெரும் வாழ்வாதார வளமாக இருந்துவந்துள்ளது. இதுதவிர இராணுவத்தினரால் அபகரிக் கப்பட்டுள்ள மக்களின் பூர்வீக காணிகள் ஒவ்வொன்றுக்குள் ளும் தென்னை, உள்ளிட்ட பல்வேறு பலன்தரு மரங்கள் காணப்படுவதுடன், பயிர்ச்செய்கை நிலங்களும் காணப் படுகின்றன. இத்தகைய வளம்மிக்க காணிகளை இரா ணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதால் அந்த மக்களின் வாழ்வாதாரம் பலவழிகளிலும் பாதிக்கப்படுகின் றது என்ற விடயத்தினை இதன்போது ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தியிருந்தேன்.

எனவே அந்தக்காணிகளை உடனடியாக விடு விப்புச் செய்து, மக்களை அங்கு மீளக்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன்.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பில் இராணு வத்து டன் தாம் கூடியவிரைவில் கலந்துரையாடவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். அந்தகலந்துரையாடலில் எட்டப் பட்ட முடிவுகள் தம்மால் வெளியிடப்படுமெனவும் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் இதன்போது தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


• • •

## தேசத்தைக் காக்கும் ... தொடர்ச்சி...

பொருளாதார சக்கரத்தைச் சுழற்றுவதில் மலையகப் பெண்கள் இருமுனைப் போராளிகளாகச் செயற் படுகின்றனர்.

ஒருபுறம், நாட்டின் பாரம்பரிய ஏற்றுமதித் துறை யான தேயிலைப் பயிர்ச்செய்கையைத் தமது தோள்களில் சுமக்கின்றனர். மறுபுறம், வெளிநாடுகளில் உழைத்து அந்நியச் செலாவணியைப் பெற்றுத்தருவதன் மூலம் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்கின்றனர். தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2024 தரவுகள் வெறும் எண்கள் அல்ல. அவை மலையகப் பெண்களின் தியாகம், துணிச்சல் மற்றும் நாட்டின் மீதான அவர்களின் அமைதியான பொருளாதாரப் பங்களிப்பின் சாட்சியங்களாகும். இவர்களுக்கான முறையான சமூக அங்கீகாரமும், ஊதிய உயர்வும், பாதுகாப்பும் வழங்கப்பட வேண்டியது ஒட்டுமொத்த தேசத்தினதும் கடமையாகும்.




## சூடானில் “இணை ... தொடர்ச்சி...

உள்ளடக்கிய 15 உறுப்பினர்களைக் கொண்ட ஜனாதிபதி மன்றத்தின் தலைவராக RSF தளபதி ஜெனரல் முகமது ஹம்தான் டகாலோவை அது நியமித்தது. அப்தெலாஜிஸ் ஆடம் அல்-ஹிலு துணைத் தலைவராகவும், சூடானிய அரசியல்வாதியான முகமது ஹசன் ஒத்மான் அல்-தாயிஷி பிரதமராகவும் நியமிக்கப்பட்டனர்.

TASIS-இன் கூற்றுப்படி, இந்த மாற்று அரசாங்கத்தின் உருவாக்கம், “சுதந்திரம், நீதி மற்றும் சமத்துவம் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில்,அனைவரையும் உள் ளடக்கிய ஒரு தாயகத்தையும், ஒரு புதிய மதச்சார்பற்ற, ஜனநாயக, பரவலாக்கப்பட்ட மற்றும் தானாக முன்வந்து ஒன்றுபட்ட சூடானையும் உருவாக்குவதற்கான” அதன் உறுதிப்பாட்டைப் புதுப்பிக்கிறது.

பின்னர், ஆப்பிரிக்க ஒன்றியம், அரபு லீக் மற்றும் சவூதி அரேபியா ஆகியவை, மோதல்களால் பாதிக்கப்பட்ட நாட்டில் ஒரு இணை அரசாங்கத்தை அமைப்பதாக அறிவித்ததற்காக RSF-ஐக் கண்டித்தன. சூடானிய ஆயுதப் படைகள் (SAF), இந்த “மிலீஷியா அரசாங்கம்” என்று அழைக்கப்படுவது, RSF தனது கூட்டாளிகளை ஏமாற்று வதற்கான ஒரு தந்திரம் என்றும், அதன் உண்மையான நோக்கம் தனிப்பட்ட ஆதாயத்திற்காக அதிகாரத்தைக் கைப்பற்றுவதே என்றும் கண்டனம் தெரிவித்துள்ளன.

## பெரிய ஈரானுக்கு ... தொடர்ச்சி...

1,600 கி.மீ (1,000 மைல்கள்) தொலைவிற்கும் அதிகமான தூரத்தில் உள்ள மக்களுக் காகப் பணம், வீட்டுப் பொருட்கள் மற்றும் தனிப்பட்ட சொத்துக்களை வழங்குவதற்காக, அந்தப் புனித நாளில் தங்களின் வழக்கமான சடங்குகளையும் கொண்டாட்டங்களையும் தற்காலிகமாக நிறுத்திய இந்திய நிர்வாக காஷ்மீரைச் சேர்ந்த பலரில் அவரும் ஒருவர்.

அவரைப் பின்தொடர்ந்து வந்த அவரது உறவினர் கள், ஒவ்வொருவரும் தங்களுக்கு மதிப்புமிக்க தனிப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்தனர்.

“நாங்கள் விரும்புவதைக் கொடுக்கிறோம். இது எங்களை அவர்களுக்கு மேலும் நெருக்கமாக்குகிறது,” என்று இந்திய நிர்வாக காஷ்மீரின் மத்தியப் பகுதியில் உள்ள புட்காமைச் சேர்ந்த 55 வயதான முக்தார் கூறினார். பின்னர், அந்தப் பகுதி வரலாற்று ரீதியாக அறியப்பட்ட ஒரு பெயரையும் அவர் குறிப்பிட்டார். “சின்ன ஈரான் அதன் பெயருக்காக இதைத்தான் செய்கிறது. காலத்தையும் மோதல்களையும் கடந்து இந்தப் பிணைப்பு நீடிக்கிறது.”

அறுநூறு ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றுத் தொடர்புகளில் வேரூன்றிய அந்தப் பிணைப்பு, போரின் போது மிகவும் வெளிப்படையான இருப்பைப் பெற்றுள்ளது – இது ஈரானிய அதிகாரிகளிடமிருந்து அங்கீ காரத்தையும், நிதி திரட்டும் முறைகள் குறித்து இந்திய அதிகாரிகளிடமிருந்து கவலைகளையும் ஈர்த்துள்ளது.

## அமெரிக்காவின் ... தொடர்ச்சி...

அலைத் தடைகளை விதித்துள்ளது. ஸ்காட் பெசென்ட் இந்த நடவடிக்கையை, “ஈரானிய மக்களின் இழப்பில் இலாபம் ஈட்ட முயற்சிக்கும்... ஆட்சி உயரடுக்கினரை” குறிவைக்கும் “பொருளாதார சீற்றம்” என்று வர்ணித்தார்.

இந்தத் தடைகள் ஏற்கனவே உள்ள. அழுத்தத்தை மேலும் அதிகரிக்கின்றன, சுமார் 140 மில்லியன் பீப்பாய் ஈரானிய எண்ணெய் உலகச் சந்தைகளை அடைய அனுமதித்த 30 நாள் விலக்கு ஏப்ரல் 19 அன்று காலா வதியாகிறது, மேலும் அது நீட்டிக்கப்படாது எனவும் தெரி வித்துள்ளார்.

## ஈரான் போரினால் ... தொடர்ச்சி...

அவற்றின் உள்கட்டமைப்பை ஈரானியத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கியது, மேலும் கத்தாரின் திரவ இயற்கை எரிவாயு (LNG) உற்பத்தியை சுமார் 5 ஆண்டுகளுக்குச் சேதப் படுத்தியது.

இந்தப் பிராந்தியத்திற்கு இது சொல்லும் செய்தி: இந்த பாதுகாப்பு வலயம் உண்மையானதல்ல. அதே நேரத்தில், அமெரிக்கா முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வளைகுடா எண்ணெயைக் குறைவாக இறக்கு மதி செய்கிறது. அமெரிக்காவிற்கு கச்சா எண்ணெய் தேவைப்பட்டபோது இந்த ஒப்பந்தம் அர்த்தமுள்ளதாக இருந்தது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் அதன் தேவை குறைந்து வருகிறது.

சவூதி அரேபியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் சுமார் 250 பில்லியன் டொலர் அமெரிக்கக் கடனை வைத்துள் ளன. பெட்ரோ டொலர் (Petrodollar) மதிப்பு சரிந்தால், அந்தப் பணம் கருவூலப் பத்திரங்களில் முடங்கிக் கிடக் காது, அதன் பாதிப்பை அனைவரும் உணர்வார்கள்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்





